RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE BUYING - SELLING - LEASE - PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 31, 14 யூன் 2024 இதழ்:- 03

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! யூன் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

## தமிழ் பொதுவேட்பாளருக்கு எதிராக முழு மூச்சோடு செயற்பட வேண்டுமென சுமந்திரன் முழக்கம்! கைதட்டி ஆர்ப்பரித்த கூட்டத்தினர்!



பொது நிலைப்பாடும் பொது வாக்கெடுப்பும் எனும் தலைப்பி லான கலந்துரையாடல் கடந்த 09 யூன் 2024 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் தந்தை செல்வா அரங்கில் முன்னெடுக்கப்பட்டது. சுடரேற்றி ஆரம் பிக்கப்பட்ட நிகழ்வில் தொடக்கவுரையினை வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் ிவஞானம் ஆற்றினார். கருத்துரைகளை சட்டத்தரணி ந.சிறிகாந்தா பேராசிரியர் அ.சர்வேஸ்வரன் வைத்தியர் ப.சத்தியலிங்கம், எம்.ஏ.சுமந்திரன், பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை (7ம் பக்கம் பார்க்க)

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
3-1286 Kennedy Rd.
Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins Manulife Foresters

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## 13வது அரசியலமைப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்த தயங்க மாட்டேன் என சஜித் பிரேமதாச கிளிநொச்சியில் சூளுரை

அரசியலமைப்பின் 13ஆவது திருத் தம் தொடர்பில் பேசுவதற்கே சிலர் அச்சமடைகின்றனர். ஆனால் நான் அதற்கு தயங்குபவன் அல்ல. ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் 13ஆவது திருத்தம் நிச்சயம் நடைமுறைப்படு த்தப்படும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச உறுதியளித்தார். பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப செயற் றிட்டத்தின் கீழ் கிளிநொச்சி, பாரதி வித்தியாலயத்துக்கு பாடசாலை உப கரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் 09 யூன் 2024 ஞாயிற்றுக் கிழமை கலந்து கொண்டு உரையாற் றும் போதே எதிர்க்கட்சி தலைவர் இவ்வாறு உறுதியளித்தார். அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், (5ம் பக்கம் பார்க்க)



ஈழநாடு:- மின்னிதழில் வாசிக்க eelanadu.ca

முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளின்
வாழ்வாதாரத்திற்காகவும், கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை
13வது ஆண்டாக நடாத்தும்
ஊட்டும் கரங்கள்
தமிழும் இசையும்
இராப்போசன விருந்தும்
இன்பத் தமிழ்ப் பேச்சு
பர்வின் சுல்தானா
யூலை 28, 2024
ஞாயிற்றுக்கிழமை - 5:30PM
METROPOLITAN CENTRE
3840 FINCH AVE EAST
SCRBOROUGH ( FINCH/ KENNEDY)
Zee தமிழ் சரிகமப புகழ்
கோபாலகிருஷ்ணன்
இன்னிசை மாலை

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

“ஒரு முகவர் இரு சேவைகள்”
“One Broker Two Services”
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representatives*



**Siva Kandiah**
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com

Team SIVA
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
Sales Representative B.Comm.
Dir: 647-221-5220
piravien@gmail.com



21 Years Real Estate Experience

HomeLife Today Realty Ltd.,
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS

Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY





## Exceptional Opportunity to lease a prime stand-alone Building and nicely finished ground floor office space on Oshawa

- This property offers 19,500 Sq Ft of prime Industrial space
- Including 4,300 Sq Ft of Office space,
- 15,200 Sq Ft of Warehouse plus mezzanine space
- This building features 2 truck level doors within a heated dock area
- 2 Drive -in Doors with trailer parking on the side.


- Well-connected to highways (401,412 and 407)
- Easy access to public transit, providing great access to a strong labor pool
- Conveniently located near the GM plant







### Dundas / Henry




**Whitby** **$999,000**
Bedrooms: 3+2 Washrooms: 2
Easy access to Whitby Go

### Midland Ave/ Eglinton Ave



**Scarborough** **$1,150,000**
Bedrooms: 3 Washrooms: 2
Excellent Location, Min To Subway

### Taunton/Garden



**Whitby** **$969,000**
Bedrooms: 3 Washrooms: 2
Professionally Renovated Home

### Lawrence /Morningside



**Scarborough** **$425,000**
Bedrooms: 3 Washrooms: 2
Large Open Balcony

### Tapscott Rd/Mclevin Ave

FOR LEASE



**Scarborough** **$2,200**
Bedrooms: 2 Washrooms: 1
Clean and well kept Townhouse

### Major Mac./Markham Rd

FOR LEASE



**Markham** **$1,850**
Bedrooms: 2 Washrooms: 1
Excellent Location, Sep. Entrance




# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**

**105 DINSDALE DR**
**WOODBRIDGE - ON**
**L4H 2M4 - CANADA**

**416 841 9600 / 905 653 3000**
**eelanadu1993@ gmail.com**


## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 - 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# ரணில், சஜித் ஆட்சிக்கு வந்தால் 13 அமுலாகும்!
## நாட்டு மக்களை ஒன்றிணைத்து போராடுவோம்- விமல் அணி




தமிழர்களின் தீர்மானமிக்க வாக்குகளுடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றால் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவார். 13 ஆவது திருத்தத்தில் எதிர்க்கட்சித் தலைவரும், ஜனாதிபதியும் ஒரே நிலைப்பாட்டில் உள்ளார்கள். ஆகவே தேசியம் தொடர்பாக பெரும்பான்மையினத்தவர்கள் விசேட கவனம் செலுத்த வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்தார்.

ஸ்ரீஜயவர்தனபுர கோட்டை பகுதியில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத்தில் கடந்த புதன்கிழமை (12) இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கை அரசியல் வரலாற்றில் சிங்கள எதிர்க்கட்சித் தலைவர்கள் எவரும் குறிப்பிடாத வகையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வடக்கு மாகாணத்துக்கு சென்று தமிழ் மக்களிடம் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை தான் முழுமையாக அமுல்படுத்துவேன் என்று பகிரங்கமாக குறிப்பிட்டுள்ளார். பெரும்பாலான மக்கள் 13 ஆவது திருத்தத்துக்கு எதிராக இருப்பதால் எதிர்க்கட்சித் தலைவர்கள் எவரும் இதுபோன்று கருத்துரைக்கவில்லை.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழர்களின் வாக்குகளை இலக்காகக் கொண்டே எதிர்க்கட்சித் தலைவர் 13 ஆவது திருத்தம் பற்றி பேசியுள்ளார். ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார முன்வைத்த 22 ஆவது திருத்த தனியார் பிரேரணையில் கூட்டமைப்பின் உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனின் வலியுறுத்தலுக்கமைய 13 ஆவது திருத்தத்தை பலப்படுத்தும் வகையில் இரண்டு சட்டத் திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச ,1987 ஆம் ஆண்டு இந்து – லங்கா ஒப்பந்தத்துக்கு இணக்கம் தெரிவித்ததை தொடர்ந்து 13 ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்தார். இருப்பினும் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதாக அவர் ஒருபோதும் குறிப்பிடவில்லை. ஜனாதிபதியாக பதவி வகித்துக் கொண்டு அவர் அவ்வாறு செயற்படவுமில்லை. குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக கூற்றுக்களை வெளியிட முன்னர் 13ஆவது திருத்தத்தின் வரலாற்றை எதிர்க்கட்சித் தலைவர் அறிந்துக் கொள்ள வேண்டும். அப்போது அதன் பாரதூரம் மற்றும் திருத்தங்களின் உண்மை நோக்கத்தை விளங்கிக் கொள்ள முடியும்.

இந்து – அமெரிக்க நோக்கத்துக்காக பிரிவினைவாத முரண்பாடுகள் தோற்றுவிக்கப்படுகின்றன. 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை இந்தியாவுக்கு உள்ளது. இந்தியாவின் தற்போதைய அரசியல் மாற்றம் இதற்கு முன்முனைப்புடன் செயற்படுகிறது.

இந்து – லங்கா ஒப்பந்தம் மற்றும் 13 ஆவது திருத்தம் ஆகியவற்றுக்கு எதிராக நிலவிய கடுமையான எதிர்ப்பினால் அவற்றை சர்வஜன வாக்கெடுப்பின் ஊடாக நிறைவேற்ற முடியாத சூழல் காணப்பட்டது. 13 ஆவது திருத்தம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட நீதியரசர்கள் 13 ஆவது திருத்தம் தேசியத்தின் தலைமீது கட்டப்பட்டுள்ள கூர்மையான வாள் என்று குறிப்பிட்டனர். திருத்தங்கள் ஊடாக வாள் கட்டப்பட்டுள்ளன. அவற்றை அவிழ்ப்பது பாரியதொரு குற்றமாகும்.

தற்போதைய அரசியல் நிலைவரம் மற்றும் வெளிநாடுகளின் அழுத்தம் ஆகிய காரணிகளால் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை மாத்திரம் நீக்குவது பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையாது. 13ஆவது திருத்தம் இல்லாமல் நாட்டுக்கு பொருந்தும் வகையில் பிரிவினைவாத அம்சங்கள் இல்லாத வகையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும். சிறுபான்மை இனத்தவர்களின் தீர்மானமிக்க வாக்குகளுடன் எதிர்க்கட்சித் தலைவர் ஆட்சிக்கு வந்தால் புதிய அரசியலமைப்புக்கு பதிலாக 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முயற்சிப்பார்.

13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் நிலைப்பாட்டில் தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் உள்ளார்கள். இவ்விருவரில் எவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டாலும் பிரிவினைவாதத்தை ஊக்குவிப்பார்கள். ஆகவே இவ்விருவரின் செயற்பாடுகள் குறித்து பெரும்பான்மையின மக்கள் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

# எம் தேசத்தில் யுத்தம் தின்ற பெற்றோர்களின் குழந்தைகள்




என் இனிய உறவுகளே! 13 ஆண்டுகளுக்கு முன் எமது இல்லங்கள் ஆரம்பிக்கப்பட்ட போது இந்தக் குழந்தைகள் போன்றவர்களை வாரி அணைத்து 86 குழந்தைகளோடு ஆரம்பித்து இன்று 423 குழந்தைகளின் அன்பு நிறைந்த இடமாகவுள்ளது அன்பு இல்லம். மூன்று வேளை உணவு, உடை, உறையுள் மட்டுமன்றி கல்வி மேம்பாடு விளையாட்டு, பரதநாட்டியம் என பல்வேறு துறைகளிலும் எமது இல்லக் குழந்தைகள் முன்னணி வகித்து வருகின்றார்கள். அன்பர்களே! அருகே காணப்படும் குழந்தைகள் இன்றும் ஆலய வீதிகளிலும் கடையோரங்களிலும் நிற்கும் குழந்தைகளைப் பொறுப்பேற்க முடியாதுள்ளமைக்கு எமது இல்லத்தின் நிதி நெருக்கடியே காரணமாகும். உங்கள் கருணையினை இவர்கள் பக்கமும் திருப்புங்கள்! எமது சந்ததியை நாமே காப்பாற்றுவோம்! 28 யூலை 2024 இவர்களுக்காகவும் வாருங்கள்! (12,13ம் பக்கம் பார்க்க)




**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**



# 13வது திருத்தம் கொடுத்ததை மீளப் பெற்று அது நலிவடைந்து விட்டதென சஜித்திற்கு சுமந்திரன் எடுத்துரைப்பு!



யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான குழுவினர் 10 யூன் 2024 திங்கட்கிழமை தமிழரசு கட்சியினரை சந்தித்தார். இலங்கை தமிழரசு கட்சி அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

கட்சி தலைவர் மாவை சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் மற்றும் கட்சியின் சிரேஸ்ட தலைவர் சிவிகே சிவஞானம், நிர்வாக செயலாளர் குலநாயகம் ஆகியருடன் எதிர்க்கட்சி தலைவர் சஜித்பிரேமதாச தலைமையிலான குழுவினர் சந்திப்பை மேற்கொண்டனர்.

இச்சந்திப்பு தொடர்பில் என்ன பேசினோம் என்பது குறித்து சுமந்திரன் தெரிவிக்கையில் அதிகார பகிர்வு குறித்து தமிழ் சிங்கள மக்கள் தெளிவாக, விபரமாக அறியக் கூடியவாறு தேர்தல் அறிக்கை இருக்க வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதசவிடம் கூறினோம் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அதிகார பகிர்வு சம்பந்தமாக எங்களுக்கு இருக்கிற ஏமாற்றங்கள், தொடர்பில் எடுத்துக் கூறினோம். நாங்கள் வேண்டாம் எனக் கூறும் 13ஆம் திருத்தத்தைக் கூட மிக மோசமான நிலைக்குக் கொண்டு வந்து விட்டுள்ளார்கள். கொடுத்ததை கூட சூழ்ச்சிகள் ஊடாக மீளப் பெற்றுக் கொள்கின்றார்கள். அதனால் இப்போது அது மிக நலிவடைந்து காணப்படுகிறது. 13ஆம் திருத்தத்தை அமுல் படுத்துவேன் எனக் கூறுவதில் கூட இன்றைக்கு அர்த்தம் இல்லாத நிலைமை காணப்படுகிறது எனக் கூறினோம்.

எதிர்க்கட்சி தலைவர் தனது நோக்கு குறித்துக் கூறுகையில், கிராமங்கள் நகரங்களைக் கட்டி எழுப்பி அதனூடாக பிரதேசத்தைக் கட்டியெழுப்பி அதன் பின்னரே மாவட்டம், மாகாணம் நாடு என்பதே தன்னுடைய கோட்பாடு என்று கூறியிருந்தார்.

விசேடமாக நிதி பகிர்வு குறித்துக் கூறினார். அதிகார பகிர்வினை கொடுத்து விட்டு, நிதி பகிர்வை கொடுக்காவிடில் அதில் பயனில்லை என்றும் கூறினார்.

அதேவேளை இனங்கள் மத்தியில் உள்ள பரஸ்பர நம்பிக்கையீனத்தை இல்லாதொழிக்க வேண்டும். அதற்கு நாம் அனைவரும் முயற்சிக்க வேண்டும் என எம்மிடம் கூறினார் அதன் பின்னர் நாம் எதிர்க்கட்சி தலைவரிடம், தமிழ் மக்களின் அடையாளம் பேணப்பட வேண்டும். தமிழர்களின் பூர்வீகமான நிலப்பரப்பான வடக்கு கிழக்கு தாயகம் இணைந்ததாகப் பூரண அதிகார பகிர்வு வேண்டும். அது அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும் எமது மக்கள் எதிர்பார்க்கும் அதிகார பகிர்வு பற்றிப் பேசாமல் வேறு விடயங்களைச் சொல்வது அதிகார பகிர்வு குறித்துச் சொல்லாது தப்பியோடுவதாக இருக்கக் கூடாது. அதிகார பகிர்வு தொடர்பில் விபரமாகத் தமிழ் சிங்கள மக்களுக்குச் சொல்ல வேண்டும் எனக் கூறினோம். தனது தேர்தல் அறிக்கையில் அது குறித்துத் தெளிவாகக் கூறுவேன் என்றார். கடந்த ஜனாதிபதி தேர்தலில் கூறியதை வைத்துத் தான் தமிழ் மக்கள் உங்களுக்குப் பெருவாரியாக வாக்களித்தனர். எனக் கூறி நீங்கள், கொடுக்கும் வாக்குறுதியை முழு நாட்டிற்கும் சொல்ல வேண்டும். அதனை வைத்துத் தான் நாம் தீர்மானிப்போம், என எதிர்க்கட்சி தலைவரிடம் கூறினோம்.

தேர்தலில் தமக்கு ஆதரவு தாருங்கள் என வெளிப்படையாகக் கேட்கவில்லை. ஆதரவினை பெறும் நோக்குடனான சந்திப்பாகவே இது அமைந்தது என மேலும் தெரிவித்தார்.

மே மாதம் முதல் குறுகிய காலத்திற்கு
மாதம் இரு முறையாக வெளிவரும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
அடுத்த அச்சுப் பத்திரிகையை
28 யூன் 2024 வெள்ளிக்கிழமை
அனைத்து வர்த்தக நிலையங்களிலும்
பெற்றுக் கொள்ளலாம்.
பிரதி வெள்ளிக்கிழமை தோறும் eelanadu.ca
மின்னஞ்சல் மூலம் வாசிக்கலாம்
தொடர்புகளுக்கு 416 841 9600




கனடா – அருள்மிகு
ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்
104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)
Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!


அருள்மிகு கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில் பக்தர்களுக்கு வணக்கம். கனடா ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில் இலாப நோக்கமற்ற தொண்டு நிறுவனமாக கனடா அரசாங்கத்தினால் அங்கீகாரம் பெற்றுள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இதுவரை காலமும் கோயில் நிலம் வாங்குவதற்கு நன்கொடை கொடுத்த பக்தர்கள் அனைவரும் உங்கள் பழைய பற்றுச்சீட்டை கோயிலில் கொடுத்து கனடிய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இலக்கம் பதியப் பெற்ற புதிய பற்றுச்சீட்டை கோயிலில் பெற்றுக் கொண்டு அரசாங்கத்திடமிருந்து வருமானவரி வரிச் சலுகையை பெற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இனி வரும் காலங்களில் கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயிலுக்கு நிலம் வாங்குவதற்கும் இப்போது நடைபெறும் திருப்பணிக்காக நன்கொடை செய்வதற்கும் அல்லது எந்தவிதமான பூஜைகள் திருவிழாக்களிற்கும் கோயிலில் பணம் கொடுக்கும் போது அதற்குரிய பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளுவதன் மூலம் அரசாங்கத்திடமிருந்து வருமானவரி வரிச்சலுகையை பெற்றுக்கொள்ளலாம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். ஓம் தாயே மகமாரி — நிர்வாகசபை

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# இலங்கையில் நீதி பொறுப்புக்கூறலுக்கான அமெரிக்காவின் ஒத்துழைப்புத் தொடரும் - அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள சர்வதேச குற்றவியல் நீதிக்கான சிறப்புத் தூதுவர் தெரிவிப்பு!



இலங்கையில் நீதி மற்றும் பொறுப்புக் கூறலுக்கான முக்கியமான அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துவதை மையப்படுத்தி தொடர்ந்தும் பணியாற்ற எதிர்பார்ப்பதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் சர்வதேச குற்றவியல் நீதிக்கான சிறப்புத் தூதுவர் பெத் வான் ஷாக் தெரிவித்துள்ளார்.

வொஷிங்டனில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜீலி சங்கை சந்தித்த வேளையிலேயே அவர் இந்தக் கருத்தினை தெரிவித்துள்ளார். இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜீலி சங் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் வருடாந்த தலைமை இராஜதந்திரிகளின் அமர்வில் பங்கேற்றிருந்தார்.

இதில் பங்கேற்பதற்கச் சென்றிருந்த ஜுலி சங் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் சர்வதேச குற்றவியல் நீதிக்கான சிறப்புத் தூதுவர் பெத் வான் ஷாக்குடன் உரையாடல்களில் ஈடுபட்டிருந்தார்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் வெளிப்படுத்தியுள்ள அவர் இலங்கையில் நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான முக்கியமான அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துவதை மையப்படுத்தித் தொடர்ந்தும் பணியாற்ற எதிர்பார்த்துள்ளேன்.

தூதுவர் ஜீலி சங்குடனான சந்திப்பது அருமையாக இருந்தது - நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான முயற்சிகளைத் தொடர்வதற்கு அமெரிக்க தூதுவருடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்த்துள்ளேன் என்றார்.

இதேவேளை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜீலி சங், அமெரிக்க சர்வதேச வளர்ச்சி நிதிக்கழகத்தின் துணை தலைமை நிர்வாக அதிகாரி நிஷா பிஸ்வாலை சந்தித்தும் உரையாடியுள்ளார்.

இதேவேளை அமெரிக்கத் தூதுவர் ஜீலி சங் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் செயலாளர் அன்டனி பிளிங்கனையும் சந்தித்து உரையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 13வது அரசியலமைப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்த தயங்க மாட்டேன் என சஜித் பிரேமதாச கிளிநொச்சியில் சூளுரை



அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பில் பேசுவதற்கே சிலர் அச்சமடைகின்றனர். ஆனால் நான் அதற்கு தயங்குபவன் அல்ல. ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் 13ஆவது திருத்தம் நிச்சயம் நடைமுறைப்படுத்தப்படும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச உறுதியளித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப செயற்றிட்டத்தின் கீழ் கிளிநொச்சி, பாரதி வித்தியாலயத்துக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் 09 யூன் 2024 ஞாயிற்றுக் கிழமை கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சி தலைவர் இவ்வாறு உறுதியளித்தார். அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

பல்வேறு தலைவர்கள் பல்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு வழிகளில் பொய்களைக் கூறிக் கொண்டிருக்கின்றனர். 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும் என ஐக்கிய மக்கள் சக்தி தொடர்ந்தும் கூறிவருகிறது. சர்வதேச தொழிலாளர் தினத்தன்றும் அந்த உறுதி மொழி வழங்கப்பட்டது.

அரசியலமைப்பிலுள்ள 13ஆவது திருத்தம் நிச்சயம் அமுல்படுத்தப்படும். வடக்கு, கிழக்கு மாத்திரமின்றி 9 மாகாணங்களிலும் உள்ள மக்களுக்கும் இந்த வாக்குறுதியை வழங்குகிறேன். இதனை நடைமுறைப்படுத்த தயங்கப் போவதில்லை.

இதன் மூலம் இப்பிரதேச மக்களின் அரசியல், மத, சமூக, கலாசார உரிமைகள் பாதுகாக்கப்படும். அடிப்படை உரிமைகள் என்ற அத்தியாயத்தில் அரசியல் மற்றும் சிவில் உரிமைகளே உள்ளடங்கியுள்ளன. ஆனால், ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் இந்த அத்தியாயத்தை விரிவுபடுத்தி இதில் பொருளாதார, சமூக, மத, சுகாதார, கல்வி உரிமைகள் வழங்கப்படும்.

13ஆவது திருத்தம் குறித்து பேசும் போது பல தலைவர்கள் ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டு கேட்காதது போல் பாசாங்கு செய்வர். அல்லது அது பற்றிய பேச்சினை உதாசீனப்படுத்துவார்கள். ஒரு சிலர் அது தொடர்பில் பேசுவதற்கு அச்சப்படுகின்றனர். இவ்வாறு பெரும்பாலானோர் சந்தர்ப்பவாதிகளாக நடந்து கொண்டாலும் நாம் இவ்விடயத்தில் நேர்மையாகவே நடந்து கொள்கின்றோம்.

எனவே எவ்வித பேதமும் இன்றி நாட்டை கட்டியெழுப்ப ஒன்றிணையு.மாறு அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன். பல்வேறு அரசியல்வாதிகள் வடக்கிற்கு வந்து அரசாங்கத்தின் வளங்களை பகிர்ந்தளித்தாலும், பல்வேறு நன்கொடையாளர்கள் வழங்கிய உதவிகளையே நான் வழங்கி வருகிறேன். எதிர்க்கட்சியில் உள்ள ஏனைய கட்சிகள் பணியாற்றாது இருந்தாலும், நானும் எனது குழுவும் மக்களுக்கு சேவையாற்றி வருகின்றோம்.

இனவாதத்தைப் பரப்பி தமது வாக்குகளை தக்க வைத்துக் கொள்ள முயற்சிக்கும் அரசியல் வாதிகளிடம் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும். பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து சிந்திக்காமல் தமது வாக்குகள் குறித்து சிந்திப்பவர்களே இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால், நான் அவ்வாறு செயற்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழ்மக்கள் விரும்பும் அரசியல் தீர்வு!

தான் ஜனாதிபதியானால் நாட்டின் இறையாண்மைக்கு பாதகமில்லாமல் தமிழ் மக்கள் விரும்பும் தீர்வை வழங்குவேன் என்று சஜித் பிரேமதாஸ தெரிவித்திருகின்றார். அதேவேளை தமிழ், முஸ்லிம் மக்கள் தன்னைத் தான் ஆதரிப்பார்கள் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்திருக்கின்றார்.

முதலில் நாட்டின் இறையாண்மை என்பதால் சஜித் என்ன புரிந்து கொள்கிறார் என்பது முக்கியம். ஏனெனில், நாட்டின் இறையாண்மை என்னும் பெயரில் பெரும்பாலான விடயங்களை நிராகரிக்க முடியும். உதாரணமாக அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள பொலிஸ் அதிகாரத்தை நிராகரிக்க முடியும் வடக்கு, கிழக்கு இணைப்பை நிராகரிக்க முடியும் இவ்வாறு பல விடயங்களை எதிர்க்க முடியும் அல்லது பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஏனையோர் அவ்வாறு எதிர்கின்றபோது அதனை மௌனமாக அங்கீகரிக்க முடியும்.

கடந்த காலத்தில் நாட்டின் தேசிய பாதுகாப்பு மற்றும் இறைமை என்னும் பெயரில் தான் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. யுத்தம் நிறைவுற்று பதினைந்து வருடங்களாகின்றன. இந்தக் காலத்தில் தமிழ் மக்களின் பிரச்சனைகளை தீர்க்கும் முயற்சிக்கு மாறாக மேலும் புதிய பிரச்னைகளை ஏற்படுத்தும் விடயங்களே நடைபெற்றிருந்தன.

வடக்கு, கிழக்கில் பௌத்தமயமாக்கல் தீவிரப்படுத்தப்பட்டன. சிறிய சிறிய பிரச்னைகளுக்கு தீர்வை தேடும் நிலைமை திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்டது. இந்த விடயங்களில் சஜித் பிரேமதாஸவுக்கு நேரடியான தொடர்பு இல்லையென்று கூற முடியுமானாலும் இந்தக் காலத்தில் நடைபெற்ற பல பிரச்னைகளின்போது அதனை கண்டிக்கும் பலமான குரலாக சஜித் இருந்திருக்கவில்லை. இதே போன்று தான் ரணில் விக்கிரமசிங்கவும் இருந்தார்.

தேர்தல் காலங்களில் தமிழ் மக்களின் நியாயமான அரசியல் தீர்வுக்கு ஆதரவாக பேசுவதும் அதிகாரத்தை கைப்பற்றிய பின்னர் எதிர்ப்பை கருத்தில் கொண்டு பின்வாங்குவதும் தென்னிலங்கை அரசியலுக்கு புதிதல்ல. இதன் காரணமாகவே தென்னிலங்கை வேட்பாளர்கள் எவரையும் நம்ப முடியாதென்னும் குரல்கள் தமிழ் மக்கள் மத்தியில் மேலெழுந்திருக்கின்றன. தேர்தல் காலவாக்குறுதிகளை நம்பக்கூடிய நிலையில் தமிழ் மக்கள் இருக்க வேண்டுமென்று தென்னிலங்கை அரசியல்வாதிகள் கருதக்கூடாது. ஏனெனில், கடந்த காலங்களில் ஒரு தீர்வை நோக்கி செல்வதற்கு விடுதலைப் புலிகள் தடையாக இருக்கின்றனர் என்றே கூறப்பட்டு வந்திருக்கின்றது.

ஆனால் யுத்தம் முடிவுற்றதன் பின்னர் எந்தவோர் ஆக்கபூர்வமான தீர்வு முயற்சிகளிலும் தென்னிலங்கை ஈடுபாட்டை காண்பிக்கவில்லை. யுத்தத்தின் போது பயன்படுத்திய தீர்வு தொடர்பான தென்னிலங்கை சொற்களும் யுத்தத்தை வெற்றி கொண்டதன் பின்னர் தென்னிலங்கை பயன்படுத்திய சொற்களும் முற்றிலும் வித்தியாசமானவை. தமிழ் மக்கள் பேரம் பேசுவதற்கான பலத்துடன் இருந்த போது தென்னிலங்கை அதிகார மையம் தமிழ் மக்களின் நியாயத்தை ஏற்றுக் கொள்வதான தோற்றத்தைக் காண்பித்தது.

ஆனால் பலத்தை இழந்த பின்னர் ஆகக்குறைந்த கோரிக்கைகளைக் கூட ஏற்றுக் கொள்வதற்கு இணங்கவில்லை. உண்மையில், தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டிருந்தால் கடந்த பதினைந்து வருடங்களில் சில பிரச்சனைகளை தீர்த்திருக்க முடியும். ஆனால், அவ்வாறு நடைபெறவில்லை. காரணம், தமிழ் மக்கள் விரும்பும் தீர்வை ஏற்றுக் கொள்வதற்கான மனோநிலையில் தென்னிலங்கை இல்லை என்பதாகும். இந்த நிலையில், சஜித் பிரேமதாஸ தமிழ் மக்கள் விரும்பும் தீர்வை, தான் வழங்குவேன் என்று கூறுவதை எவ்வாறு ஏற்றுக்கொள்வது?

மே மாதம் முதல் குறுகிய காலத்திற்கு மாதம் இரு முறையாக வெளிவரும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
அடுத்த அச்சுப் பத்திரிகையை 28 யூன் 2024 வெள்ளிக்கிழமை
அனைத்து வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.
பிரதி வெள்ளிக்கிழமை தோறும் eelanadu.ca மின்னஞ்சல் மூலம் வாசிக்கலாம்
தொடர்புகளுக்கு 416 841 9600

# ஈழத்தமிழர்களுக்கு தனிநாடு அமைக்க பிரதமர் மோடியைச் சந்திக்கவுள்ள மதுரை ஆதீன முதல்வர் ஹரிஹர பரமாச்சாரியார்



மக்களவைத் தேர்தலில் பாஜகவுடன் கூட்டணி வைக்காத காரணத்தால் தான் அதிமுக தோல்வி தழுவியதாக மதுரை ஆதீனம் தெரிவித்துள்ளார். மதுரையில் மதுரை 293 ஆவது ஆதீனமான ஹரிஹர தேசிக பரமாச்சாரியர் செய்தியாளர்களை 10 யூன் 2024 சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

இந்தியாவின் 3 ஆம் முறையாக பிரதமராக பதவி ஏற்றுள்ள மோடிக்கும், அமைச்சர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகள்.

இலங்கையில் லட்சக்கணக்கான தமிழர்களே கொன்று குவிக்க காரணமானவர்களும் வெற்றி பெற்று விட்டார்களே என மன வருத்தம் உள்ளது. இந்த காரணத்திற்காகவே காங்கிரஸ் கட்சி மத்தியில் ஆள முடியவில்லை, வெற்றி பெற்றுள்ள பிரதமர் நரேந்திர மோடிக்கு இரண்டு கோரிக்கைகளை முன் வைக்கிறேன். இந்திரா காந்தி தாரை வார்த்து கொடுத்த கச்சத்தீவை மீட்டெடுக்க வேண்டும். கச்சத்தீவு மீட்டெடுத்தால் தமிழகத்தின் மீன்வளம் அதிகரிக்கும். ஆகவே கச்சத்தீவு மீட்டு தமிழ்நாட்டோடு இணைக்க வேண்டும். இலங்கையில் உள்ள தமிழ் மக்களே பாதுகாக்க பிரதமர் மோடி தமிழ் ஈழத்தை ஏற்படுத்த வேண்டும். இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி வீடுகளை கட்டிக் கொடுத்துள்ளார்.

கச்சத்தீவு மீட்டு மீனவர்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க வேண்டும். 60 ஆண்டுகளாக கச்சத்தீவு விவகாரம் குறித்து யாரும் பேசவில்லை. பாஜகவின் கூட்டணி ஆட்சி சரியாக வரும். தமிழகத்தில் உள்ள அனைத்து கட்சிகளுக்கும் மக்கள் முறையாக வாக்களித்து அங்கீகாரம் கொடுத்திருக்கிறார்கள். மக்களின் முடிவு சரியானதாக உள்ளது. இருந்த போதிலும் இலங்கை தமிழர்களை கொன்று குவித்தவர்களுக்காக வாக்கு அளித்து இருக்கிறார்களே அது தான் எனக்கு வருத்தமாக உள்ளது. இலங்கை தமிழர்கள் விவகாரம்மற்றும் கச்சத்தீவு விவகாரம் என இரண்டிற்காக நான் பிரதமர் மோடியை ஆதரிக்கிறேன்.

பிரதமர் மோடி எதையும் தாங்கும் இதயம் கொண்டவர். பாஜக குறைந்த தொகுதிகளில்வெற்றி பெற்றதால் அக்கட்சியை தோல்வி அடைந்த கட்சி என விமர்சனம் செய்கிறார்கள்.பாஜக பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று இருந்தால் பட்டனை அமுக்கியவுடன் தாமரைக்கு ஓட்டு விழுகிறது என கூறியிருப்பார்கள். ஜனநாயக நாட்டில் தோல்வி வெற்றி என்பது மக்கள் கொடுக்கக் கூடிய தீர்ப்பாகும்.60 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்தவர்களே 90 தொகுதிகளில் தான் வெற்றி பெற முடிந்தது.

காங்கிரஸ் ஆட்சி கால கட்டத்தில் எத்தனை முறை ஆட்சி கலைக்கப் பட்டது. ஆனால் பாஜக ஆட்சி புரிந்த காலகட்டத்தில் யாருடைய ஆட்சிகளையும் கலைக்கவில்லை. இலங்கை தமிழர்களுக்காக தனி நாடு அமைக்க வேண்டுமென விரைவில் பிரதமர் மோடியை சந்தித்து கோரிக்கை விடுக்க உள்ளேன். பிரதமர் மோடி சிவபெருமான் மீது பக்தியாக இருக்கிறார். தியானம் செய்கிறார், விபூதி பூசி கொள்கிறார். காசி விசுவநாதர்

பிரதமர் எல்லா நாடுகளுக்கும் செல்கிறார் எல்லா மதங்களையும் ஆதரிக்கிறார். ஆகவே அவரை நான் ஆதரிக்கிறேன், பாஜகவிற்காக நான் தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபட்டதில்லை. நாடாளுமன்ற தேர்தலில் பாஜகவுடன் கூட்டணி வைக்காத காரணத்தால் அதிமுக தோல்வி தழுவியுள்ளது. அதிமுக கட்டமைப்புகளை மேம்படுத்தவில்லை. இந்த தேர்தலில் பாஜக, நாம் தமிழர் கட்சி ஆகிய கட்சிகள் தமிழகத்தில் நல்ல கட்டமைப்புகளை உருவாக்கி உள்ளது. இலங்கை தமிழர்களுக்கு ஆதரவு கொடுக்கும் அனைவருக்கும் நான் ஆதரவு கொடுப்பேன். இலங்கைக்கு நான் நேரில் சென்றால் என்னை சுட்டு விடுவார்கள். இலங்கையில் தமிழர்கள் இருந்தாலும் சிங்கள வெறியர்கள் அங்கே தான் இருக்கிறார்கள் என கூறினார்.

**மே மாதம் முதல் குறுகிய காலத்திற்கு மாதம் இரு முறையாக வெளிவரும் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் அடுத்த அச்சுப் பத்திரிகையை 28 யூன் 2024 வெள்ளிக்கிழமை அனைத்து வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.**

பிரதி வெள்ளிக்கிழமை தோறும் eelanadu.ca மின்னஞ்சல் மூலம் வாசிக்கலாம் தொடர்புகளுக்கு 416 841 9600


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

**Math & Physics Tutoring**

**(For High School Students)**



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions, Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# தமிழ் பொதுவேட்பாளருக்கு எதிராக முழு மூச்சோடு செயற்பட வேண்டுமென சுமந்திரன் முழக்கம்! கைதட்டி ஆர்ப்பரித்த கூட்டத்தினர்!



பொது நிலைப்பாடும் பொது வாக்கெடுப்பும் எனும் தலைப்பிலான கலந்துரையாடல் கடந்த 09 யூன் 2024 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் தந்தை செல்வா அரங்கில் முன்னெடுக்கப்பட்டது.

சுடரேற்றி ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வில் தொடக்கவுரையினை வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வி.கே. சிவஞானம் ஆற்றினார். கருத்துரைகளை சட்டத்தரணி ந.சிறிகாந்தா பேராசிரியர் அ.சர்வேஸ்வரன், வைத்தியர் ப.சத்தியலிங்கம், எம்.ஏ.சுமந்திரன், பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் ஆற்றினர்.

நிகழ்வில் மாவை சேனாதிராசா, எம்.கே.சிவாஜிலிங்கம், மாகாண சபை உறுப்பினர்களான கே.சஜந்தன், து.ரவிகரன், இ.ஆனல்ட் ஆகியோரும் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் கலந்துக்கொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்

தமிழ் பொது வேட்பாளருக்கு எதிராக முழு மூச்சோடு நாம் இறங்கி செயற்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரன் தெரிவித்துள்ளார். சமஸ்டி அடிப்படையிலான அதிகார பகிர்வு தான் வேண்டும் என்பதனை இனியும் நிறுவ தேவையில்லை. கடந்த 70 ஆண்டுகளுக்கு முன்னரே நிறுவி விட்டோம். திரும்ப திரும்ப அதனை நிறுவ தேவையில்லை.

பொது வேட்பாளர் என்பது விஷ பரீட்சை என சொல்வதனை விட உதவாத விஷ பரீட்சை என்று கூட சொல்ல முடியாது. இது தமிழ் மக்களின் இருப்பை இல்லாது செய்யும் நிகழ்வு. இதற்கு தமிழ் மக்களின் அரசியல் தலைவர்களாக நாங்கள் செல்ல கூடாது.

அரசியல் தலைவர்கள், அரசியல் கட்சிகள் முன்னெடுக்க வேண்டிய விடயம். சிவில் சமூகம் ஆலோசனைகளை மட்டும் வழங்கலாம். அவர்களின் ஆலோசனைகளை வரவேற்போம்.

தேர்தல் என்பது அரசியல் நிகழ்ச்சி. அந்த அரசியலில் மக்களை வழி நடத்த சிவில் சமூகத்தை மக்கள் தெரிவு செய்து அனுப்பவில்லை. மக்கள் எமக்கே ஆணை தந்துள்ளார்கள். நாங்களே மக்களை அரசியல் ரீதியாக வழி நடத்த கூடியவர்கள். நாங்கள் எங்கள் பொறுப்பை விட்டு விட்டு மக்களை உதாசீனப்படுத்த முடியாது.

இதையெல்லாம் தாண்டி நாங்கள் நிறுத்தி தான் ஆவோம் என யாராவது ஒற்றைக்காலில் நின்றால் அவர்களுக்கு எதிராக மக்களை விழிப்படைய செய்ய வேண்டியது எங்களுடைய பொறுப்பு.

அதற்கு எதிராக நாங்கள் செயற்பட்டால் எங்களுக்கு உடனடியாக துரோகி பட்டம் கட்டுவார்கள். அதற்காக நங்கள் ஒழிந்து ஓட போவதில்லை. துரோகி பட்டத்திற்கு இன்று பெறுமதியே இல்லாமல் போய் விட்டது. ஆனால் என்ன தான் செய்தாலும் எங்கள் மக்களின் அடிப்படை உரித்தை விட்டுக்கொடுக்கவோ விலை பேசவோ நாம் அனுமதிக்க போவதில்லை.

தமிழ் வேட்பாளர் என ஒருவரை அடையாளப்படுத்தி முற்படுத்தினால் அதற்கு எதிராக பிரச்சாரம் செய்ய வேண்டும் நாங்கள் ஏனென்றால் அவர் தேர்தலில் படு தோல்வி அடையும் போது, இது எங்களின் அரசியல் நிலைப்பாடு அல்ல. இது யாரோ செய்த கோமாளி கூத்து என நாங்கள் சொல்ல கூடியதாக இருக்க வேண்டும். எனவே எமது கட்சியை சார்ந்தவர்கள் தமிழ் பொது வேட்பாளருக்கு எதிராக பிரச்சாரம் செய்ய வேண்டும். என்னையும் துரோகி என்று சொல்லி விடுவார்களோ என ஒழிந்து ஓட வேண்டாம். பொது வேட்பாளருக்கு எதிராக முழு மூச்சோடு நங்கள் செயற்பட வேண்டும் என தெரிவித்தார்.

### பேராசிரியர் சர்வேஸ்வரன்

பொது வேட்பாளன் விடயத்தை நான் ஆதரிக்கவில்லை உலகில் இரண்டு வகையான சர்வஜன வாக்கெடுப்புகள் உள்ளன. ஸ்பெயினில் நடந்த வாக்கெடுப்பைக் கூறலாம்.

ஜனாதிபதி தேர்தலில் சர்வஜன வாக்கெடுப்பில் மக்கள் இரண்டில் ஒரு முடிவில் இருப்பார்கள். ஜனாதிபதித் தேர்தலுக்கும் சர்வஜன வாக்கெடுப்பிற்கும் இடையில் பாரிய வேறுபாடு உள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்துவதன் ஊடாக எமது கருத்துக்களை அரசாங்கத்திற்கு கூற முடியாது. பல உதாரணங்கள் உள்ளன. ஒஸ்லோ மாநாட்டிலும் உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் தீர்வு காண முயற்சிக்கப்பட்டது.

புதிய அரசியல் யாப்பினை மாற்றியமைக்கும் குழுவில் இருந்தோம் அதில் தமிழ் மக்கள் ஒற்றையாட்சியை ஏற்க மாட்டார்கள் என்று கூறினேன். அரசியல் அமைப்பாக வேறு மதம் வேறு இதனை பௌத்தத்திற்கு முதலிடம் கொடுப்பது தவறு எனக்கூறினேன்.

தமிழ் மக்கள் சார்பில் பொது வேட்பாளரை நிறுத்த உடன்படவில்லை எமது எதிர்பைக் காட்டும் வகையிலான வாக்கினை எடுக்க வேண்டும். தமிழ் பொது வேட்பாளர் வடக்கு கிழக்கில் உள்ள மொத்த வாக்குகளில் கணிசமான வாக்கினைப் பெறுபவராக இருக்க வேண்டும்.

நாம் இப்போது 6 கட்சிகளாக பிரிந்து உள்ளோம். மலையக மக்களை நாம் இணைக்கவில்லை அவர்களின் பிரச்சனைகள் வேறு எமது பிரச்சனைகள் வேறு கிழக்கு மாகாணத்திலுள்ள பல அரசியல்வாதிகள் பொது வேட்பாளரை விரும்பவில்லை பொது வேட்பாளர் மேலும் கட்சிகள் பிரிவடையும். 2024 இல் பொது வேட்பாளரை நிறுத்தினால் 2029 இலும் நிறுத்த போகிறோமா என்பதும் முக்கியமான கேள்வியாகும். ஜனாதிபதி சர்வஜன வாக்கெடுப்புக்கு போவதும் நாம் பொது பொது வேட்பாளரை நிறுத்துவதும் ஒன்றுதான் என தெரிவித்தார்.

### ந.ஶ்ரீகாந்தா

சுமந்திரனின் வழக்கத்திற்கு மாறான உரையுள்ளது. நண்பர்களே நாம் இந்நாட்டில் அடக்கி ஒடுக்கப்படும் இனம். நாம் பல துன்பங்களை சுமந்தோம். மந்திரி சபை வெள்ளையர்கள் போக முன்னரே ஆரம்பித்து விட்டனர். முல்லைத்தீவு கொக்கிளாய், நாயாறு உள்ளிட்ட பழம்பெரும் இடங்களை பிரித்து எம்மை வேறாக்க நினைத்தனர்.

எங்கள் தொன்மைக்கு இன்று சவால் வந்துள்ளது. இன்று மூன்று பிரதான வேட்பாளர்கள் உள்ளனர். நண்பர் அனுர பல தடவை கோல் எடுத்தார். நான் பேசவில்லை 2009 யுத்தம் முடிந்து நடை பிணமாக வாழ்கின்றனர். நாளை ரணிலோ, சஜித்தோ, அனுரவோ சமஷ்டியை பரிசீலனை செய்ய தயாரில்லை.

கட்சிகளோ, அரசியல்வாதிகளோ பிரச்சனை அல்ல பெரும்பான்மையான இனத்திற்கு நாம் என்ன செய்ய வேண்டும். எமைப்பற்றி சிந்திக்காத எந்த கட்சிக்கும் நாம் வாக்களிக்க மாட்டோம். சர்வதேச வகிபாவம் ஆரோக்கியமாக இருக்கும் போது எமது சிங்கள தலைவர்கள் எவருக்கும் வாக்களிக்க மாட்டோம். நாம் கட்சியாக மட்டும் பிரிந்துள்ளோம். ஆனால் நாம் பிரியவில்லை பல்லவன், சோழன் காலத்திலிருந்து தமிழர்கள் இவ்வாறு தான். Now or never இந்த பிரச்சனை தீர்க் கப்படும். ஆயுதம் ஏந்தி போராடின வர்கள் மண்டை ஓடுகளாக சிதறி உள்ளார்கள். எனது சட்டக் கல்லூரி நண்பன் ரணில் சஜித் அமுல் பேபி போலுள்ளார்.

## இந்தியாவை அழைப்பதற்கு முன்னர்

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மூன்றாவது தடவையாக பிரதமராக பதவியேற்கவுள்ள நரேந்திர மோடி அவர்களுக்கான வாழ்த்துச் செய்தியில், ஈழத் தமிழ் மக்களுக்கான சமஷ்டித் தீர்வுக்கு இந்தியா அரணாக வேண்டும் என்று தெரிவித்திருக்கின்றார்.

இந்திய பிரதமர் மோடியின் அழைப்பையே உதாசீனம் செய்த சம்பந்தனின் தலைமையின் கீழ் செயல்பட்ட சிறீதரன், இந்திய பிரதமருக்கு வாழ்த்துச் செய்தியை அனுப்பியது வரவேற்கப்பட வேண்டிய விடயம் தான் எனினும், இந்தியாவை நோக்கி அழைப்பு விடுவதற்கு முன்னர் தமிழ்கட்சிகளின் இன்றைய நிலையை சரிசெய்ய வேண்டியதே முதன்மையானதாகும்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியை முதலில் சரி செய்ய வேண்டியிருக்கின்றது அத்தோடு, ஏனைய கட்சிகளையும் உள்வாங்கி ஜக்கிய முன்னணி ஒன்றை ஏற்படுத்த வேண்டியிருக்கின்றது. அதன் பின்னர் தான் இந்தியாவை நோக்கிச் செல்ல வேண்டும். தமிழ் அரசு கட்சிக்கான தலைவர் தெரிவில் வெற்றி பெற்றவர் சிறீதரன் ஆனாலும் அவரால் தலைவராக செயல்பட முடியவில்லை அந்தளவுக்கு கட்சி உள் முரண்பாடுகளுக்குள் சிக்குண்டு, சீரழிந்து கொண்டிருக்கின்றது. தான் தலைவரானால், இந்திவுடனான உறவுகளை கட்டியெழுப்பும் நோக்கில் புதுடில்லியில் அலுவலகம் ஒன்றை ஏற்படுத்தப் போவதாகவும் சிறீதரன் அறிவித்திருந்தார்.

சிறீதரனின் தலைமைத்துவ ஆற்றலை இப்போதைக்கு எவரும் மதிப்பிட முடியாது. ஏனெனில், அவர் தலைவராக அமரவில்லை. அதற்கான வாய்ப்பு அவருக்கு இதுவரையில் கிட்டவில்லை. ஆனால், சம்பந்தனது தலைமைத்துவம் தோல்வியடைந்து விட்டது. சம்பந்தன் ஒரு தோல்வியடைந்த அரசியல்வாதி. அதே போன்று, அரசியல் தீர்வு விடயங்களை கையாள்வதில் சுமந்திரனும் தோல்வியடைந்த ஒருவர் தான். இதற்கு அடிப்படையான காரணம் என்ன? காரணம் ஒன்று தான் அதாவது, சூழ்நிலைகளில் ஆற்ற வேண்டிய காரியங்களை ஆற்றாமல், சாத்தியமற்ற விடயங்களை கையாள முற்பட்டதாகும்.

அரசியல் என்பது அடிப்படையில் சாத்தியங்களை கையாளும் கலையாகும். ஒவ்வொரு காலகட்டங்களில் ஒவ்வொரு விடயம் சாத்தியமாகலாம். அதனை சரியாக புரிந்து கொண்டு, அதற்கேற்றவாறு அரசியல் தந்திரோபாயங்களையும் செயல்பாடுகளையும் ஒருங்கிணைக்க வேண்டியதே ஒரு தலைமையின் பணியாகும்.

அரசியலை கையாளுதல் என்பது இது தான். ஆனால், சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோரின் அணுகுமுறை அவ்வாறு அமைந்திருக்கவில்லை.

அதேவேளை தமிழ் அரசுக் கட்சிக்குள் அவர்களின் அணுகுமுறைகள் தவறானவை என்பதை சுடடிக் காட்டும் வல்லமையுடன் எவரும் இருந்திருக்கவில்லை அத்துடன் பங்காளிக் கட்சிகளிலுள்ள ஆற்றலுள்ளவர்களை இணைத்துக் கொண்டு பயணிக்கும் துணிச்சலும் தமிழ் அரசுக் கட்சியிலிருந்தவர்களிடம் இருந்திருக்கவில்லை. இவ்வாறான காரணங்களால் தான், 2015 இன் ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து, கிடைக்கப் பெற்ற வாய்ப்புகளை சம்பந்தன் வீணாக்கியபோது, அதற்கு ஏனையவர்களும் நேரடியாகவும் மறைமுகமாகவும் பக்கபலமாக செயல்பட்டிருந்தனர்.

சிறீதரனும் இந்த விடயத்தில் விமர்சனத்துக்கு அப்பால்பட்டவர் அல்லர். சிறீதரன் போன்றவர்கள் தலைவர்களாக வேண்டுமென்றால் அனைத்து தரப்புக்களையும் அரவணைத்துச் செயல்படுவதற்கு ஏற்றவாறு தன்னை தயார் செய்ய வேண்டும். ஈழத் தமிழர் விவகாரத்தில் இந்தியா எக்காலத்திற்குமான நிர்ணயகரமான சக்தி. இதனை புரிந்து கொண்டு அதேவேளை, சூழ்நிலைகளை கையாளும் திறனுள்ள தலைவர்கள் தமிழர் அரசியலை கட்டுப்படுத்தும் போது மட்டுமே விடயங்கள் முன்னோக்கி நகரும். இந்தியாவை நோக்கி பிரத்தியேகமாக செல்வதற்கு ஒன்றுமில்லை. ஏனெனில் இந்தியா அதன் நிலைப்பாட்டை தெளிவாக முன் வைத்திருக்கின்றது முன்வைத்து வருகின்றது எனவே, இப்போது, தமிழ் மக்கள் மத்தியிலிருந்து தான் விட யங்கள் நகர்த்தப்பட வேண்டும்.

மாதம் இருமுறை வெளியாகும்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை 28 யூன் 2024
வெள்ளிக்கிழமை அச்சுப் பத்திரிகையாக
அனைத்து தமிழ் வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு 416 841 9600
வாரம் தோறும் eelanadu.ca மின்னிதழ் மூலம் பார்வையிடலாம்

# 274 பாலஸ்தீனியர்களைக் கொன்று 4 பணயக் கைதிகளை மீட்ட இஸ்ரேல் கொமாண்டோ படைகள்



இஸ்ரேலியப் படைகளால் மீட்கப்பட்ட நான்கு பணயக் கைதிகள் மீட்கப்பட்ட தாக்குதலில் 274 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர். மேலும் 698 பாலஸ்தீனியர்கள் காமடைந்தனர்.

அல்-நுசிராத் அகதிகள் முகாமில் இருந்த இரண்டு கட்டிடத்தில் இரண்டு இரண்டு பேராகத் தடுத்து வைக்கப்பட்ட நான்கு பணயக் கைதிகளை இஸ்ரேலியப் படைகள் தாக்குதல் நடத்தி மீண்டு வந்தனர்.

ஆளில்லா வேவு விமானம் நேரலையில் காணொளிகளை எடுக்க உலங்கு வானூர்தியில் சென்ற சிறிய இஸ்ரேலிய சிறப்புப் படைக் குழு

அல்-நுசிராத் அகதிகள் முகாமில் தரையிறங்கி பணயக் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்த கட்டிடத்திற்குள் நுழைந்து துப்பாக்கிச் சூட்டை நடத்தி பணயக் கைதிகளை மீட்டு வரும் போது இஸ்ரேலியப் படைகள் போர் விமானங்கள் மூலம் பெரியளவில் வான்வழித் தாக்குதல்கள் நடத்தினர். இதன்போது அந்த அகதிகள் முகாமில் இருந்த 226 பாலஸ்தீனியர்கள் இஸ்ரேலிய வான்படைகளின் தாக்குதலில் கொல்லப்பட்டனர். மேலும் 400 பேர் வரையில் காயமடைந்தனர்.

சனிக்கிழமையன்று வான், தரை மற்றும் கடல் வழியாக மத்திய காசாவில் உள்ள நுசிராத் மற்றும் டெய்ர் எல்-பலாஹ்வைத் இஸ்ரேலியப் படைகள் தாக்கின.

ஐரோப்பிய ஒன்றியம் நுசிராத் தாக்குதலை ஒரு படுகொலை என்று அழைத்தது.

அதே நேரத்தில் அல்-அக்ஸா மருத்துவ மனையின் உட்புறம் ஒரு படுகொலை கூடம் போல் தெரிகிறது என்று ஒரு மருத்துவர் கூறினார்.

எல்லைகளற்ற மருத்துவர்கள் (MSF) தாக்குதல்களைத் தொடர்ந்து மருத்துவமனையில் உள்ள காட்சிகள் இரத்தக் களரிகளாக காட்சியளித்தன என்றும் மருத்துவமனைகள் முடங்கிவிட்டன என்னர். மற்றொரு மருத்துவர் மருத்துவமனை ஒரு கசாப்புக் கடை போன்று தெரிகிறது என்றார்.

இந்த மீட்பு நடவடிக்கைக்காக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இராணுவத்தினரைப் பாராட்டினார். இந்த நடவடிக்கை துணிச்சலுடன் மேற் கொள்ளப்பட்டதாக நெதன்யாகு பாராட்டியுள்ளார். உயிருடன் இருந்தாலும் சரி, இறந்திருந்தாலும் சரி, கடைசி பணயக்கைதியை மீட்கும் வரைக்கும் நாங்கள் போராடுவோம். அவர்களுக்காக எங்கள் உயிரைத் தியாகம் செய்வோம் என்றார்.

இந்த நடவடிக்கையை மேற்கொள்ளும் படைகள் ஹமாஸின் கடுமையான துப்பாக்கிச் சூட்டை எதிர்கொள்ள வேண்டி இருந்தது என்று பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலன்ட் கூறினார்.

# யாழ்ப்பாணத்தில் தமிழரசுக்கட்சியைச் சந்தித்த அநுரகுமார!

தேசிய மக்கள் சக்தியினருக்கும் தமிழ் அரசுக் கட்சியினருக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று 11 யூன் 2024 செவ்வாய்க்கிழமை காலை யாழில் நடைபெற்றது. யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள அனுரகுமார திஸாநாயக்க தலைமையிலான குழுவினர் மாவை சேனாதிராசா தலைமையிலான தமிழ் அரசுக் கட்சியினரை சந்தித்து கலந்துரையாடினர்.

யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியிலுள்ள தமிழ் அரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் இன்று காலை இச் சந்திப்பு இடம்பெற்றது. இதன் போது பிரதானமாக ஜனாதிபதித் தேர்தல் உட்பட சமகால அரசியல் நிலைமைகள் பற்றி கலந்துரையாடப்பட்டன.

இச் சந்திப்பில் தமிழ் அரசுக் கட்சி சார்பில் அதன் தலைவர் மாவை சேனாதிராசா, துணைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், நிர்வாக செயலாளர் குலநாயகம், ஊடகப் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர்



கலந்து கொண்டிருந்தனர். அதே போன்று தேசிய மக்கள் சக்தியின் சார்பில் அதன் தலைவர் அனுரகுமார திசாநாயக்க மற்றும் அக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பிமல் ரத்நாயக்கா, இராமலிங்கம் சந்திரசேகரன் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com




# தமிழ்ப் பொதுவேட்பாளர் ஏன் என்பதை சஜித்திடம் தெட்டத் தெளிவாக எடுத்துரைத்த சுரேஷ் பிரேமச்சந்திரன்!

12 யூன் 2024 புதன்கிழமை மாலை 5.00 மணியளவில் இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தலைவருமான சஜித் பிரேமதாசா அவர்களுக்கும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் மற்றும் யாழ்மாவட்டக் கமிட்டிக்கும் இடையே சந்திப்பு நடைபெற்றது.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் என்கிற கருத்துருவாக்கம் ஏற்படுத்திய அச்சத்தின் விளைவுகளில் ஒன்றாகவே தென்னிலங்கை வேட்பாளர்களது பயணங்களும் சந்திப்புகளும், உதவித்திட்டங்களும் அமைவதாக எண்ண முடிகிறது.

சஜித் பிரேமதாசா அவர்களின் அழைப்பின் பேரில் மேற்படி சந்திப்பு அவர் தங்கியிருக்கும் ஹோட்டலில் நடைபெற்றது. உதவித் திட்டங்கள் வழங்கி விட்டு வருவதில் சற்றுத் தாமதாக வந்ததற்கு மன்னிப்புக் கோரலோடும் பரஸ்பர அறிமுகங்களோடும் ,தேநீரோடும் உரையாடல் தொடங்கியது.

சுரேஸ் பிரேமச்சந்திரன் கடந்த காலங்களில் வந்த ஜனாதிபதிகள் தமிழ் மக்களுக்குச் செய்ய வேண்டிய, செய்திருக்கக்கூடிய செய்யக்கூடிய விடையங்களை செய்யாது புறக்கணித்த புறக்கணிக்கும் விடயங்கள் பற்றி தெளிவாகவும், அழுத்தமாகவும் எடுத்துரைத்தார்.

அரசியல் சட்டத்தில் இருக்கக் கூடிய விடயங்களையே செய்ய மறுக்கிற அதை அவமதிக்கிற ஜனாதிபதிகளையே தமிழ்ச் சமூகம் அனுபவத்தில் கண்டிருக்கிறது என்றார்.

மாகாணசபையின் அவசியம், அதிகாரப் பரவலாக்கலின் நன்மைகள் 13 வது திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்பட்டால் வடக்கு கிழக்கு மட்டுமன்றி இலங்கை முழுவதற்கும் கிடைக்கக் கூடிய பொருளாதார நன்மைகள் பற்றி மிகத்தெளிவாக எடுத்துரைத்தார் சர்வேஸ்வரனும் வடக்கு மாகாணசபையில் தான் பெற்ற கசப்பான அனுபவங்கள் பற்றியும் ஆதாரங்களோடு எடுத்துரைத்தார்.

சஜித் அவர்களோடு வந்திருந்த அவரது கட்சியைச்சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர் இந்த விடயங்களை அக்கறையோடு குறிப்பெடுத்துக் கொண்டதை அவதானிக்க முடிந்தது.

இதற்கெல்லாம் பதிலளிக்க முயன்ற சஜித் அவர்கள் இதற்கெல்லாம் காரணம் நாம் ஒரே நாட்டின் மக்கள், சகோதரர்கள் என்ற எண்ணம் சிங்கள மக்களிடையேயும் தமிழ்மக்கள் இடையேயும் இல்லாமல் இருப்பதே என்றும் பரஸ்பர சந்தேகங்களைக் களைந்து நம்பிக்கைகள் வளரும் போதே இந்தப் பிரச்சினைகளுக்கு முடிவு வரும் எனும் தொனிப்பொருளில் பேசினார்.

இதற்கு சுரேஷ், சந்திரிகா காலத்தில் சிங்கள மக்கள் மத்தியில் நடந்த பரஸ்பர தாமரை ’உரையாடல்கள் பற்றிக் குறிப்பிட்டார். அது நடைமுறைச் சாத்தியமாக அரசாங்கம் தமிழ்மக்களை பாரபட்சமாக நடத்துவதை நிறுத்த வேண்டும் என்றார்

இவ்வாறு நடந்த உரையாடல்களில் குறிப்பாக பின்வரும் விடயங்கள் மிகவும் காட்டமாக எமது தரப்பில் இருந்து எடுத்துரைக்கப்பட்டது

,வருகின்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் என்ற நிலைப்பாட்டினை எடுப்பதற்கு கடந்த காலங்களில் வந்த ஜனாதிபதிகளால் தமிழ்மக்கள் ஏமாற்றப்பட்டதே முக்கிய காரணம் என்றும், அரசியல் அமைப்புச் சட்டத்தில் உள்ளவற்றையே நிறைவேற்ற மறுக்கின்ற ஜனாதிபதி இலங்கையில் மட்டுமே இருக்கிறார் என்றும், எமது கலாச்சாரப் பாராம்பரிய பிரதேசங்கள் நீதிமன்றக் கட்டளைகளையும் மீறி புத்த மதத்துறவிகளால் ஆக்கிரமிக்கப்படுகிறது என்றும், தனியார் காணிகள் அடாவடித்தனமாக பாதுகாப்புப் படையினரால் பறிக்கப்பட்டு கட்டிடங்கள் கட்டப்படுதல் போன்ற சட்டவிரோத நடவடிக்கைகளை தடுக்காத நிலமைகள் பற்றியும், மாகாணசபை அதிகாரங்கள் பரவலாக்கப்படாமையால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் பற்றியும் என்ற பல்வேறு விடயங்களும் மிகத்தெளிவாக எடுத்துரைக்கப்பட்டன



இறுதியாக வருகின்ற தேர்தலில் எமது மக்களின் இது போன்ற அடிப்படையான அரசியல் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு எவருக்கும் அச்சமின்றி பகிரங்கமாக வாக்குறுதிகள் உங்களால் வழங்கப்படுமாக இருந்தால் மேற்கொண்டு தமிழ் சமூகம் தனது அரசியல் நிலைப்பாடுகள் குறித்து பரிசீலிக்க முடியும் என்றும் எம்மால் கூறப்பட்டது.

காரசாரமான கருத்துகளே எமது தரப்பில் இருந்தாலும் நாம் சுட்டிக் காட்டிய படையினர் மற்றும் பிக்குகளின் அடாவடிச் செயல்பாடுகள் பற்றிய தெளிவுகளை தனது தமிழ்த் தரப்பினரிடமும் கேட்டுத் தெளிவுபடுத்திக் கொண்டதோடு எம்மைச் சந்தித்தது தனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தருவதாகவும் பயனுள்தாக இருந்ததாகவும் தெரிவித்தார்.

மிகவும் ஆரோக்கியமான அரசியல் சந்திப்பாகவே அது அமைந்ததில் திருப்தி. நிச்சயம் சஜித் பிரேமதாசா தரப்பிற்கும் அது புரிந்திருக்கும்.

# சித்தார்த்தன் - அநுர சந்திப்பு!



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமாக தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திசாநாயக்கவுக்கும் புளொட் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தனுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த 11 யூன் 2024 சித்தார்த்தன் எம்.பி.,யின் கந்தரோடை இல்லத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பில், தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் பிமல் ரத்நாயக்க, தேசிய மக்கள் சக்தியின் மத்திய செயற்குழுவின் உறுப்பினரும் யாழ். மாவட்ட அமைப்பாளருமான இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் புளொட் அமைப்பின் மத்திய குழு உறுப்பினர் கௌதமன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தார்கள்.

ஒன்றரை மணி நேரத்துக்கும் மேலாக நடைபெற்ற இச்சந்திப்பின் போது சித்தார்த்தன் கூறுகையில், தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பாக அதாவது அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக தங்களது கட்சி எடுத்துள்ள நிலைப்பாடு என்ன என்பது இது வரை தெளிவுபடுத்தப்படவில்லை. ஆகவே, அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக தெளிவான நிலைப்பாட்டினை தமிழ் மக்களுக்கு நீங்கள் வெளிப்படுத்த வேண்டும். இணைந்த வடக்கு, கிழக்கை நீதிமன்றத்தினூடாக தனித்தனி மாகாணங்களாக பிரிப்பதற்கு பிரதான பங்காளியாக ஜே.வி.பி கட்சி செயற்பட்ட விடயத்தில் எம் மக்கள் மத்தியில் இன்று வரை அதிருப்தி இருப்பதால் இவ்விடயத்தில் தேசிய மக்கள் சக்தியின் உறுதியான நிலைப்பாட்டினை நீங்கள் வெளிப்படுத்தும் பட்சத்தில், உங்கள் கட்சி சம்பந்தமான தமிழ் மக்களது மனநிலையில் மாற்றம் ஏற்படலாம் என தெளிவுபடுத்தினார்.

அதேவேளை எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நியமிப்பதற்கு, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியில் அங்கத்துவம் வகிக்கின்ற ஐந்து கட்சிகளும் ஆதரவு தெரிவித்துள்ளோம்.

சமூக மட்ட அமைப்புக்களும் அதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றன. தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பட்சத்தில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியாக நாங்கள் முழுமையாக அவருடனேயே செயற்படுவோம் என்பதையும் தெரிவித்தார்.




# 13வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! யூன் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

13 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 13 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

01 யூன் 2024 - 14 யூன் 2024 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 13வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

### மேலதிக விபரங்களுக்கு:-

### ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## 12வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சிவக்கொழுந்து செல்லத்துரை

புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சிவக்கொழுந்து செல்லத்துரை அவர்களது 12வது ஆண்டு நினைவு நாள் 11 யூன் 2024 செவ்வாய்க்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சிவக்கொழுந்து செல்லத்துரை அவர்களை நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கோபிநாத் கணேசமூர்த்தி

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த அமரர் திரு கோபிநாத் கணேசமூர்த்தி அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவுநாள் 06 யூன் 2024 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது பெற்றோர்களும் உறவுகளும் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு கோபிநாத் கணேசமூர்த்தி அவர்களை நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தனலெட்சுமி சண்முகலிங்கம்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தனலெட்சுமி சண்முகலிங்கம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 09 யூன் 2024 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தனலெட்சுமி சண்முகலிங்கம் அவர்களை நினைவு கூரும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு செல்லப்பா பாலசிங்கம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த அமரர் திரு செல்லப்பா பாலசிங்கம் அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவுநாள் 10 யூன் 2024 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு செல்லப்பா பாலசிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பாஸ்கரன் கனகரட்ணம்


வேலணைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பாஸ்கரன் கனகரட்ணம் அவர்களது முதலாவது ஆண் டுநினைவு நாள் 03 யூன் 2024 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு. பாஸ்கரன் கனகரட்ணம் அவர்களை நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 16வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சாம் பொன்னையா தவரட்ணம்

யாழ்.நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சாம் பொன்னையா தவரட்ணம் அவர்களது 16வது ஆண்டு நினைவு நாள் 05 யூன் 2025 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சாம் பொன்னையா தவரட்ணம் அவர்களை நினைவு கூரும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.





## 1வது ஆண்டு நினைவஞ்சலிகள்

### திரு இளையதம்பி கந்தையா
### திருமதி தங்கமலர் கந்தையா

யாழ்ப்பாணம் குப்பிளானைச் சேர்ந்தவர்களான திரு இளையதம்பி கந்தையா (ஓய்வு பெற்ற உதவி வைத்தியர்) திருமதி தங்கமலர் கந்தையா ஆகியோரது நினைவு நாள் 01 யூன் 2024 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னார்களது குடும்பத்தினர் இணையர்களை நினைவு கூர்ந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். இணையர்களை நினைவுகூரும் அவர்களது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



01 யூன் 2024 சனிக்கிழமை குப்பிளானைச் சேர்ந்தவர்களான முன்னாள் உதவி வைத்தியர் திரு இளையதம்பி கந்தையா அவர்களதும் திருமதி தங்கமலர் கந்தையா அவர்களதும் முதலாவது ஆண்டு நினைவாகும். அன்றையதினம் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களை நினைவு கூர்ந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




01 யூன் 2024 சனிக்கிழமை அனலைதீவு 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திரு பொன்னம்பலம் விசுவலிங்கம் அவர்களது 89வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு பொன்.விசுவலிங்கம் அவர்கள் தனது பிள்ளைகள் உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



03 யூன் 2024 திங்கட்கிழமை வேலணையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பாஸ்கரன் கனகரட்ணம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



05 யூன் 2024 புதன்கிழமை யாழ்.நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சாம் பொன்னையா தவரட்ணம் அவர்களது 16வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



06 யூன் 2024 வியாழக்கிழமை புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கோபிநாத் கணேசமூர்த்தி அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது பெற்றோர்கள், உறவுகள் அவரை நினைவு கூர்ந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




06 யூன் 2024 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சுதாகரன் சாமினி இணையர்களின் 16வது திருமண நன்நாளாகும். அன்றையதினம் இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



07 யூன் 2024 வெள்ளிக்கிழமை புங்குடுதீவைப் பூர்வீகமாகவும் கனடாவைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த செல்வன் விதுர்ஷன் சச்சிதானந்தனின் இரண்டாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




09 யூன் 2024 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தனலெட்சுமி சண்முகலிங்கம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




10 யூன் 2024 திங்கட்கிழமை அயவெட்டிஜயப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு செல்லப்பா பாலசிங்கம் அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



10 யூன் 2024 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி இணையர்கள் தமது புதுமனை புகுவிழாவின் மூன்றாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



11 யூன் 2024 செவ்வாய்க்கிழமை புஙடகுடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சிவக்கொழுந்து செல்லத்துரை அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

## 88வது பிறந்த நன்நாள் வாழ்த்து



## திருமதி வடிவேலு செல்லமுத்து

யாழ்ப்பாணம் கொல்லங்கலட்டி – தெல்லிப்பளையைச் சேர்ந்த திருமதி செல்லமுத்து வடிவேலு அவர்களது 88வது பிறந்த நன்நாள் 15 யூன் 2024 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் தனது இல்லத்தில் மிக எளிமையாகக் கொண்டாடும் அன்னை வடிவேலு செல்லமுத்து அவர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்கும் சிறப்பு உணவு வழங்கி மகிழவுள்ளார். அகவை 88 காணும் அன்னை திருமதி வடிவேலு செல்லமுத்து அவர்களை அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!



14 யூன் 2024 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி தேவநாயகி செல்வராசா அவர்களது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி தேவநாயகி செல்வராசா அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



30 மே 2024 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி மலரவன் கேசிகா இணையர்கள் சீரடிபாபா உபயமாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

AJITH SABARATNAM INSURANCE & INVESTMENTS INC.
AJITH SABARATNAM President
Cell: 647.401.5800
email: ajithsaba@gmail.com
125 Topflight Dr, 2nd floor
Mississauga ON. L5S 1Y1
Tel: 416.439.2800

Cash Point PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
Tel : 416-284-7000
$1000 $20/month

SASITHARAN LAW PROFESSIONAL CORPORATION
T: 416-949-0404
F: 416-948-0303
Vivekananthan Sasitharan - Rajabalini Sasitharan
Barristers, Solicitors & Notaries Public
10 Milner Business Court, Suite # 709, Scarborough Ontario, M1B 3C6

நியூ ரங்கனாஸ் தங்கச்சுரங்கம்
Cash for Gold
Pawning & Money Transfer
New Ranganas Jewellery
Markham & Steeles,Yellow Building,6055 Unit C-102
Scarborough,ON M1X 0A7 - Canada. 647 702 2159

Outstanding Agent for Outstanding Results.
In Your Neighbourhood Full Time Realtor
Raj Nadarajah
Sales Representative
DIR: 416-333-6115
nanohomes@gmail.com
RE/MAX

Amma Pawn Broker
அம்மா தங்கநகை அடைவு மாடம்
1.5% 2% (per month)
416-757-0034 • 416-994-3861
105A - 2425 Eglinton Ave, E, Scarborough. ammapawnbroker@gmail.com

VIBRANT HOSPITALITY GROUP
Shankar Nallathamby
905.769.1509 | 1.888.674.7770
vibranthospitalitygroup.com

FUNERAL ARRANGEMENTS OF YOUR LOVED ONES
Chapel Ridge FUNERAL HOME & CREMATION CENTRE
Funeral Director
S. Christeen
416-258-6759

N.K.S DRAPERY & BLINDS FABRIC
• Custom Made Vertical Blinds • Venetian Blinds • Draperies • Curtain • Shutters • Roller Blind
Contact: Ketha
416-321-6420
210 Silver star Blvd, Unit # 825, Scarborough, ON M1V 5J9
Email:Info@nksdrapery.com Web:www.nksdrapery.com

MORTGAGE LOAN
ALMOST ALL SERVICES AVAILABLE
J.R.B UNIVERSAL INC.
R.R.Rajkumar
Call for More Info
647-289-6164

CSC Credit Solution Centre
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor

Century 21 Innovative Realty Inc.
Jude GNANENDRAN
Sales Representative
416-827-2347 Direct
jude.gnanendran@century21.ca
www.century21jude.com
2250 Markham Road, Unit 3, Toronto ON M1B 2W4
Office: 416-298-8383 Fax: 416-298-8303

Chapel Ridge Funeral Home & Cremation Centre
Vilosan Sivatharman, B.Eng
Funeral Director
8911 Woodbine Avenue
Markham, Ontario L3R 5G1
Telephone: (416) 993-0826
Fax: (905) 305-8128
E-mail: vilosan9@hotmail.com

SR Reliance Auto Collision Inc.
Complete Auto Body Repairs & Painting
Rasan Proprietor
Tel: 416-822-4272
Fax: 647-352-4272
Email: atsrasan@gmail.com
15 Granger Ave. Toronto, ON. M1K 3K9

747 AUTOPARTS
Need Auto Parts? Look No Further!
Markham Rd: 905-471-4447
Markham - Heritage Rd: 905-294-5773
Newmarket - Davis Rd: 905-836-7447
Scarborough - Lawrence Ave: 416-285-4447
Scarborough - Milliken Blvd: 416-335-7747
Ajax - Fuller Road: 905-686-4447
www.747autoparts.com

விழா சிறப்புற வாழ்த்துகிறோம்
Netwyn www.netwyn.com
Kula Sellathurai
CEO
10 Thornmount Drive
Scarborough, ON M1B 3J4
D: 416.902.9462
O: 416.906.1414
kula@netwyn.com

அன்பு இல்லக் குழந்தைகளுக்காக
ஈழநாடு பத்திரிகை நடாத்தும் விழா
சிறப்புற வாழ்த்துகின்றேன்.
சாந்தா பஞ்சலிங்கம்
416 200 5470
(முன்னாள் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத் தலைவர்)

காப்புறுதி ஒன்றே!
• Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance
• Mortgage Insurance • Super Visa Insurance • RESP, RRSP and TFSA
Arun KULASINGAM 416.357.2847
Life Insurance Agent
Foresters KABIS

# தமிழீழத்தின் மூத்த தேசப்பற்றாளர் தமிழேந்தல் ஈழவேந்தன் நினைவரங்கில்







முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளின்
வாழ்வாதாரத்திற்காகவும், கல்வி மேம்பாட்டிற்காகவும்

உங்கள் அபிமான **ஈழநாடு** பத்திரிகை

13வது ஆண்டாக நடாத்தும்

# ஊட்டும் கரங்கள்



# தமிழும் இசையும்

## இராப்போசன விருந்தும்



## இன்பத் தமிழ்ப் பேச்சு

சிறப்புச் சொற்பொழிவாளர், தமிழ் கூறும்
நல்லுலகின் தன்னிகரற்ற பேச்சாளர்,
சொல்லின் செல்வி, மொழி அரசி, , பேராசிரியை

## பர்வின் சுல்தானா

**யூலை 28, 2024**
ஞாயிற்றுக்கிழமை - **5:30PM**

**METROPOLITAN CENTRE**
3840 FINCH AVE EAST
**SCRBOROUGH ( FINCH/ KENNEDY)**

நட்சத்திரா இசைக்குழுவின் இசையில்
Zee தமிழ் **சரிகமப** புகழ்

## கோபாலகிருஷ்ணன்

கனேடிய தமிழ்ப் பாடகர்களுடன்
இணைந்து வழங்கும்

## இன்னிசை மாலை

என் இனிய வாசகர்களே! கருணையாளர்களே! கடந்த 12 ஆண்டுகளாக நீங்கள் வழங்கி வருகின்ற ஒத்துழைப்புக்கும் வாரி வழங்கும் நன்கொடைகளுக்கும் மனமார்ந்த நன்றிகள். நீங்கள் வழங்குகின்ற ஒவ்வொரு டொலர்களும் அன்பு இல்லத்தில் வாழும் 423 குழந்தைகளுக்கு சிறப்பான முறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இவ்வாண்டு கனடிய மண்ணில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு பொருட்களின் விலையேற்றம், வேலை வாய்ப்புக் குறைவு, பொருளாதார நலிவுகள் காரணமாக எமது நிகழ்வுக்கும் பெருமளவு பணம் தேவைப்படுகின்றது. நீங்கள் ஒரு தரமான நிகழ்வைக் கண்டு களிப்பது மாத்திரமல்ல உங்கள் பணம் ஓர் தர்ம காரியத்திற்கு - 423 குழந்தைகளின் பசிப்பிணி போக்க உதவுகின்றது என்பதை மறவாதீர்கள்.

அன்பர்களே! நீங்கள் முற்கூட்டியே உங்கள் பெயர், விபரங்களை பதிவு செய்வதன் மூலம் செலவுகளை எம்மால் கட்டுப்படுத்த முடியும் என்பதால் உங்கள் பூரண ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம்.

**தொடர்புகளுக்கு- ஈழநாடு பரமேஸ்**
416-841-9600 •eelanadu1993@gmail.com

நந்தா NANTHA CATERS
Sri Lankan & Indian Food
Catering, Bakery & Take Out
Brimley & Steeles - 4915 Steeles Ave.E | Warden & Finch - 3268 Finch Ave.E
Kippling & Steeles - 5010 Steeles Ave. |
Call 416 NANTHA 1 - 416 626 8421

TECHSOURCE
Computer, Electronics & Cellphones Liquidator
1260 Kennedy Rd,
Scarborough, ON
416.757.9111
994 Albion Rd
Etobicoke, ON
647.352.2229

INCOME TAX SERVICE
PERSONAL, SMALL BUSINESS, UNINCORPORATED AND INCORPORATED TAXES, TAXES AND ASSOCIATED SERVICES
THANAM KANAGARATNAM
Tax Analyst
416.298.6781
1080 Tabscott Rd, Unit 5
Scarborough, ON M1X 1E7

வீடு வாங்க, விற்க அல்லது அது சம்பந்தமான
விடயங்கள் அறிய இலவச ஆலோசனைகளுக்கு
உங்கள் நண்பன் ஆனந் தர்மலிங்கம்
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
ANANTH Tharmalingam
Sales Representative
416.939.9525
Office: 416.287.2222

AJAX CREMATORIUM & VISITATION CENTRE
CALL: DHARMA, B.Com.,
Licenced Funeral Pre-Planner
647-713-6049

TIMES IRON WORKS INC.
Times Metals Sales


July 20
Canada Event Centre
300 Water St,
Whitby, ON
L1N 9B6
At: 6:00 PM
Saturday
VENNILA ENTERTAINERS
பெருமையுடன் வழங்கும்
MANO
LIVE IN TORONTO
GLOBAL
FINANCIAL SERVICES
ACCOUNTING & IMMIGRATION SERVICES
RAVI PONNUSAMY
Financial Broker
403 400 6003
Ravi_kumar103@yahoo.ca
#310, 100 cowdray crt
Scarborough,ON M1S 5C8
Life Insurance
Travel insurance
Super Visa Ins
RRSP
RESP
TFSA
FHSA
Rajaganapathy
vijay TV
Super Singer
Anu Anand
vijay TV
Super Singer
Muthuchippi
Shruthi
vijay TV
Super Singer
GLOBAL
FINANCIAL SERVICES
We provide comprehensive accounting & immigration services for individuals and businesses.
Our Services:
Accounting & Bookkeeping
Tax Preparation
All types of visa services
Investment
Contact Us:
THUSHE NAVARATNARAJAH
Sales Representative
416.357.4475
realtor.thushe@gmail.com
THUSHE REAL ESTATE
RE/MAX Crossroads
ABI SRICHANDRADAS
REALTOR®
Dir: 647.973.9006
abi.srichan@yahoo.com
ROYAL LePAGE ignite
Bus: 416.282.3333 Fax: 416.272.3333
D2-795 Milner Ave. Toronto ON. M1B 3C3
Independently Owned And Operated
YASI RAVICHANDRAN
REALTOR®
647.273.8121
realty@yasiravi.com
www.YasiRavi.com
ROYAL LePAGE ignite
Bus: 416.282.3333 Fax: 416.272.3333
D2-795 Milner Ave. Toronto ON. M1B 3C3
Independently Owned And Operated
ஈழநாடு
தொடர்புகளுக்கு: 437-234-8040 | 647-856-1191


Friends
MATRIMONY
உங்கள் திருமணத்
தேடலுக்கோர் முற்றுப்புள்ளி...
10,000க்கு மேற்பட்ட
வரன்கள் கையிருப்பில்!
10,000+
இலங்கைத் தமிழர்களுக்கான
உலகளாவிய திருமண இணையத்தளம்.
கனடாவில் வசிக்கும் வயது 40, (Divorced) Hindu, Vellaler, Bachelor's Degree, வரை படித்த மணமகளுக்கு பொருத்தமான வரனை எதிர்பார்க்கின்றோம். (FMID 120566)
கனடாவில் வசிக்கும் வயது 33, (Single) Hindu, Vellaler, Diploma, வரை படித்த மணமகனுக்கு பொருத்தமான வரனை எதிர்பார்க்கின்றோம். (FMID 120556)
கனடாவில் வசிக்கும் 23 வயது முதல் 45 வயது வரையான (Catholic / Christian) High School, Diploma, Bachelor Degree, Master Degree, PHD, வரை படித்த மணமகன்களுக்கு (Single / Divorced / Annulled) பொருத்தமான வரனை எதிர்பார்க்கின்றோம்.
+1 416 477 2259
+1 647 709 1761
+1 647 709 1536
+1 416 477 6854
GTA Square- 5215 Finch Ave. E. Unit 257
friendsmatrimonym@gmail.com
Mon to Fri
11AM to 6PM
Sat
12PM to 6PM
www.friendsmatrimony.com


யாழ் கந்தர்மடம் மக்கள் ஒன்றியம்-கனடா
YAZH KANTHARMADAM MAKKAL ONTRIUM -CANADA
SUMMER GET TOGETHER 2024
கந்தர்மடம் கோடைகால ஒன்றுகூடல்
Saturday, June 22, 2024
Thomson Memorial Park
1005 Brimley Rd, Scarborough, ON M1P 3E9
(Brimley & Lawrence)
10:00 AM - 8:00 PM

# தமிழ்மக்கள் பொதுச்சபை

கொள்கை அடித்தளம் இல்லாமல் கட்சிகளை ஒருங்கிணைப்பது தற்காலிகமானது செயற்கையானது என்று சுயாதீனக் குழு நம்புகிறது. தலைவர்களையும் வாக்காளர்களையும் நீண்டகால நோக்கில் பண்படுத்தி வளர்த்தெடுக்க வேண்டும் என்ற அவசியத்தையும் சமூகப் பொறுப்பையும் சுயாதீனக் குழு ஏற்றுக் கொள்கிறது. தமிழ் அரசியலில் சிவில் சமூகங்கள் தலையிடுவது என்பது தமிழ் ஜனநாயகத்தை மேலும் செழிப்பாக்கும். இனி வரும் காலங்களில் தமிழ் அரசியலின் மீதும் கட்சிகளின் மீதும் அதிகரித்த தார்மீகத் தலையீட்டைச் செய்வதற்கு தேவையான வளர்ச்சியைத் தமிழ் சிவில் சமூகங்கள் பெற்றுக் கொள்ளவேண்டும்.

இது கடந்த 2019 ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலையொட்டி தமிழ் மக்கள் பேரவையால் உருவாக்கப்பட்ட சுயாதீனக் குழுவின் அறிக்கையின் இறுதிப்பகுதி. அப்பொழுது நடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்பதற்காக மேற்படி சுயாதீனக்குழு உழைத்தது. அதற்காக கட்சித் தலைவர்களை சந்தித்தது. எனினும் சந்திப்பின் விபரங்களை ஓர் அறிக்கையாக வெளியிட்டதுக்குமப்பால் அக்குழு தொடர்ந்து செயல்படவில்லை.

அந்த அறிக்கையில் கூறப்பட்டபடி ஒரு மக்கள் அமைப்புக்கான தேவை தொடர்ச்சியாக விவாதிக்கப்பட்டு வந்தது. அந்த விவாதத்தில் ஈடுபட்டவர்களில் பெரும்பாலானவர்கள் மேற்படி சுயாதீன குழுவிலும் அங்கம் வகித்தவர்கள் தான். இவர்கள் அனைவரும் ஐந்தாண்டு கால அனுபவங்களின் அடிப்படையில் கடந்த ஏப்ரல் மாதம் 30ஆம் தேதி வவுனியாவில் ஒரு சந்திப்பை ஒழுங்குபடுத்தினார்கள். 32 பொதுமக்கள் அமைப்புகள் கலந்து கொண்ட சந்திப்பின் முடிவில் வவுனியா தீர்மானம் என்று அழைக்கப்படும் ஒரு தீர்மானம் வெளியிடப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கை தீர்மானத்தில் முன்வைக்கப்பட்டது. அக்கோரிக்கையை நிறைவேற்றும் பொருட்டு ஒரு குழு உருவாக்கப்பட்டது. அக்குழு தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள கட்சித் தலைவர்களையும் கட்சிப் பிரமுகர்களையும் கட்சி சாரா முக்கியஸ்தர்களையும் சந்தித்தது.

அதேசமயம் அச்சந்திப்புகளுக்குச் சமாந்தரமாக மக்கள் அமைப்புகள், மாவட்ட மட்ட ஒன்றியங்கள் போன்றவற்றையும் அக்குழு சந்தித்தது. கூட்டுறவாளர் ஒன்றியங்கள் கடல் தொழிலாளர் ஒன்றியங்கள் வணிகர் கழகங்கள்பார ஊர்திகள் சங்கங்கள் போன்றவற்றை அக்குழு சந்தித்தது. இச்சந்திப்புக்களின் போது மக்கள் ஒரு பொது வேட்பாளருக்கு அமோகமாக ஆதரவு தெரிவித்தார்கள். எந்த ஒரு சந்திப்பிலும் யாரும் அது தேவை தானா என்று கேட்கவில்லை. கடந்த 15 ஆண்டு கால அரசியல் செயற்பாடுகளின் மீது அவர்கள் சலிப்பும் விரக்தியும் அடைந்து விட்டார்கள். அவர்கள் மாற்றத்தைக் கேட்கிறார்கள் என்று சந்திப்பில் கலந்து கொண்ட குடிமக்கள் சமூக பிரதிநிதிகள் தெரிவிக்கிறார்கள்.

இதில் அரசியல் கட்சிகளுடனான சந்திப்பின் விவரங்களை அக்குழு கடந்த வாரம் ஓர் அறிக்கையாக வெளியிட்டது.அந்த அறிக்கையானது கடந்த 2019 ஆம் ஆண்டு தமிழ்மக்கள் பேரவையின் சுயாதீனக்குழு வெளியிட்ட அறிக்கையோடு ஒரு விடயத்தில் அதிகம் ஒத்திருந்தது. ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னரும் சில கட்சிகளைத் தவிர பெரும்பாலான ஏனைய கட்சிகளின் நிலைப்பாடுகள் ஏறக்குறைய ஒன்றுதான் என்பதே அந்த ஒற்றுமை.

ஐந்து ஆண்டுகளுக்கு முன் தமிழ்மக்கள் பேரவையால் உருவாக்கப்பட்ட சுயாதீனக் குழு ஒரு கட்டத்துக்கு மேல் செயல்பட முடியவில்லை. ஏனெனில் கட்சிகளை ஒரு பொது நிலைப்பாட்டின் கீழ் ஒருங்கிணைக்கும் சக்தி தமிழ் மக்கள் பேரவைக்கு இருக்கவில்லை. அதாவது மக்கள் அமைப்புக்கள் கட்சிகளின் மீது தார்மீகத் தலையீட்டைச் செய்யக்கூடிய சக்தி மையங்களாக இருக்கவில்லை.

ஆயின், மக்கள் அமைப்புக்கள் தங்களைப் பலமான சக்தி மையங்களாக வளர்த்தெடுத்துக் கொண்டால் தான் தமிழ் அரசியலை ஒரு புதிய பண்பாட்டை நோக்கிச் செலுத்தலாம் என்பதே கடந்த 15 ஆண்டுகளில் கற்றுக் கொண்ட பாடமாகும்.

இந்தப் பட்டறிவின் அடிப்படையில் கடந்த ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி வவுனியாவில் கூடிய குடிமக்கள் அமைப்புகள் மீண்டும் கிட்டத்தட்ட ஒரு மாத கால இடைவெளிக்குப் பின் கடந்த ஐந்தாம் திகதி,தியாகி சிவக்குமாரனின் நினைவு நாளன்று யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் அமைந்துள்ள ராஜா கிரீம் ஹவுஸ் மண்டபத்தில் கூடின.



இக்கூட்டத்தில் மேற்படி குடிமக்கள் சமூகங்களின் ஒன்றிணைவானது தன்னை தமிழ்மக்கள் பொதுச்சபை –Tamil people's Assembly–என்று பெயரிட்டுக் கொண்டது.

தமிழ் மக்கள் பொதுச் சபையானது தனது செயற்பாட்டுத் தேவைகளுக்காக கட்டமைப்புகளை உருவாக்கியிருக்கிறது. தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட மேற்படி கட்டமைப்புகள் தேவையான புதிய கட்டமைப்புகளை உருவாக்கிக் கொண்டு தமிழ்மக்கள் பொதுச்சபையைப் பலப்படுத்தும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 15ஆண்டுகளில் தமிழ் மக்கள் மத்தியில் தோன்றிய தமிழ் மக்கள் பேரவை் தமிழ் மரபுரிமைப் பேரவை் பி2 பி மக்கள் இயக்கம் போன்றவற்றின் தொடர்ச்சியாக மற்றொரு புதிய மக்கள் அமைப்பு உதயமாகியிருக்கிறது.

தமிழ் மக்கள் பொதுச்சபையானது ஒரு நிரந்தர பெயர் அல்லவென்றும் எதிர்காலத்தில் அதன் பெயர் அதன் கட்டமைப்புக்குள் உட்பட அனைத்தும் பொருத்தமான விதங்களில் மாற்றப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இது குடிமக்கள் சமூகங்கள் தங்களை பலப்படுத்திக் கொள்வதற்கான ஒரு நடவடிக்கை தான். அதற்குச் சமாந்தரமாக பொது வேட்பாளர் தொடர்பில் தமிழ் கட்சிகள் தங்கள் முடிவுகளை உத்தியோகபூர்வமாக அறிவித்த பின் கட்சிகளும் தமிழ் மக்கள் பொதுச் சபையும் இணைந்து ஒரு கலப்புப் பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்படும் என்றும் தெரிகிறது.

இக்கலப்புப் பொதுக் கட்டமைப்பு அதற்கு வேண்டிய உப கட்டமைப்புகளை உருவாக்கி அவற்றின் மூலம் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்தும் என்றும் தெரிகிறது. பொது வேட்பாளரை தெரிவு செய்வதற்கான ஓர் உபகுழு வேட்பாளருக்குடைய தேர்தல் அறிக்கை தயாரிக்க ஓர் உபகுழ் நிதி நடவடிக்கைகளுக்கு ஓர் உபகுழு என்று பல்வேறு உப குழுக்கள் உருவாக்கப்பட்டு,ஒரு பொது வேட்பாளர் முன்னுறுத்தப்படுவார் என்றும் தெரிகிறது.

தமிழ் மக்கள் பொதுச்சபையும் கட்சிகளும் இணைந்து கூட்டாக உழைத்தால் ஒரு பொது வேட்பாளரை முன்னிறுத்தும் விடயம் ஒப்பீட்டளவில் இலகுவானதாக இருக்கும். அது மட்டுமல்ல தமிழ் அரசியலில் அது ஒரு புதிய பண்பாட்டை வளர்க்கும். தமிழ் அரசியல்வாதிகள் மக்களுக்கு பொறுப்புக்கூறும் ஒரு பண்பாடு அது. அவ்வாறு பொறுப்புக் கூறும் பண்புடைய ஒரு அரசியல் கலாச்சாரத்தை உருவாக்கினால் அதன் விளைவாக கண்ணியமான நேர்மையான, அர்ப்பணிப்பு மிக்க தலைவர்கள் அதிகமாக மேலெழுவார்கள். தனி நபர்களுக்காக கட்சிக்காக வாக்குத் கேட்கும் மிதவாத அரசியல் பண்பாட்டை மாற்றி தேசத்துக்காக வாக்கைத் திரட்டும் ஒரு புதிய பண்பாடு வளர்த்து எடுக்கப்படும்.

ஒரு புறம் தமிழ்மக்கள் தங்கள் தெரிந்தெடுத்த பிரதிநிதிகளை சந்தேகிக்கின்றார்கள் திட்டுகிறார்கள். இன்னொருபுறம் தமிழ்மக்கள் பல துண்டுகளாக உடைந்துபோய்க் காணப்படுகிறார்கள். அவிழ்த்து விடப்பட்ட பாக்கு மூட்டை போல சிதறும் ஒரு மக்கள் கூட்டத்தை, ஒவ்வொரு நெல் மணியாகத் திரட்ட ஒரு புதிய அரசியல் பண்பாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். அதற்கு ஜனாதிபதித் தேர்தலை ஒரு களமாகப் பயன்படுத்துவது.

தமிழ் மக்கள் பொதுச்சபையானது ஒரு பொதுத் தமிழ் வேட்பாளர் என்ற விடயத்தையொட்டி உருவாக்கப்பட்டாலும் அதன் இறுதி இலக்கு நீண்ட காலத் தரிசனத்தைக் கொண்டது என்பது வவுனியா தீர்மானத்தின் இறுதிப் பந்தியில் கூறப்பட்டிருக்கிறது.

ஒரு தேசிய இனமாக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் உச்சபட்ச தீர்வு ஒன்றைப் பெறும் விதத்தில் தமிழ் மக்களை பலப்படுத்துவதற்கு இவ்வாறான மக்கள் அமைப்புக்கள் அவசியம். தமிழரசியலை ஒரு புதிய பண்பாட்டை நோக்கித் திரட்டுவதற்கு இது போன்ற மக்கள் அமைப்புக்கள் அவசியம்.

கடந்த நூற்றாண்டில் கட்சிகள் தோன்றுவதற்கு முன்பு தமிழ் அரசியலில், மக்கள் அமைப்புக்கள், மகா சபைகள், வாலிப காங்கிரஸ்கள் போன்றன தோன்றின. கடந்த நூற்றாண்டில் முதலாவது தசாப்தத்தில் யாழ்ப்பாண சங்கம், மட்டக்களப்புச் சங்கம் போன்றன தோன்றின. அதன்பின் 1921இல் தமிழர் மகாசபை தொடங்கியது.1924இல் யாழ்ப்பாண வாலிப காங்கிரஸ் தொடங்கியது. அதன்பின் கட்சிகள் அரங்கினுள் பிரவேசித்தன.


கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –




கடந்த நூற்றாண்டின் அறுபதுகளில் முதலில் ஈழத் தமிழர் இளைஞர் இயக்கம் 1968ல் தொடங்கியது. பின்னர் தமிழ் மாணவர் பேரவை 1970இலும்,தமிழ் இளைஞர் பேரவை 1973இலும், 1976 அளவில் மனிதன் இயக்கமும் தோன்றின.

ஆயுதப் போராட்ட கால கட்டத்திலும் முதல் இரண்டு கட்ட ஈழப் போர்களின் போதும் அன்னையர் முன்னணிகள், பிரஜைகள் குழுக்கள் போன்ற மக்கள் அமைப்புகள் தோன்றின. 1980களின் ஆரம்பத்தில் கிராமிய உழைப்பாளர் சங்கம் தோன்றியது. 1981இல் யாழ் பல்கலைக் கழகத்தில் மறுமலர்ச்சிக் கழகம் தோன்றியது. 1985இல் யாழ் பல்கலைக்கழக. கலாசாரக் குழு தோன்றியது. அதன் தொடர்ச்சியம் வளர்ச்சியாக, 1990களின் தொடக்கத்தில் அரங்கச் செயற்பாட்டுக்குழு தோன்றியது. அரங்கச் செயற்பாட்டுக்கு குழுவே பொங்கு தமிழ் பேரெழுச்சியை நொதிக்கச் செய்தது.

யாழ்ப்பாண இடப்பெயர்வுக்கு பின் யாழ்ப்பாணத்தில் முதலில் சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்கான மக்கள் அமைப்பு என்ற அமைப்பு இயங்கியது. அதன் தொடர்ச்சியாக மனிதநேய அமைப்புக்களின் இணையம் என்ற ஓர் அமைப்பு இயங்கியது. இறுதிக் கட்டப் போரில் அதாவது(22ம் பக்கம் பார்க்க)




# திரும்பிப் பார்ப்பாரா மோடி?

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



இந்திய பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள், டில்லியில் ஆட்சி மாற்றத்துக்கு தூண்டுதலாக அமையா விட்டாலும், பலத்த அதிர்வலைகளை உருவாக்கியிருக்கிறது. 2014 தேர்தலில் பா.ஜ.க. தனித்து ஆட்சி அமைக்கக் கூடிய பெரும்பான்மை பலத்தை பெறவில்லை.



அதனால் கூட்டணிக் கட்சிகளை நம்பியிருக்க வேண்டிய நிலை காணப்பட்டது. 2019 இல் அந்த நிலை மாறியது. தனித்து 303 ஆசனங்களை கைப்பற்றி, தான் நினைத்தபடி ஆட்சியை நடத்தக் கூடிய சூழ்நிலை பிரதமர் மோடிக்கு உருவாக்கியது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும், அவரது அரசாங்கமும், பா.ஜ.க.வும் நடந்து கொண்ட விதம் இன்று பரவலான விமர்சனங்களுக்கு உள்ளாகி இருப்பதற்கும், இந்த தேர்தலில் ஏற்பட்டிருக்கின்ற பின்னடைவுகளுக்கும் அந்த தனிப் பெரும்பான்மை பலம் தான் பிரதான காரணம். இந்தியா உலக அரங்கில் தன்னை முக்கியமானதொரு சக்தியாக வளர்த்துக் கொண்டிருக்கின்ற போதும், இந்த ஐந்து ஆண்டு காலத்தில், அதன் வெளியுறவுக் கொள்கையும் அண்டை நாடுகளுடனான உறவுகளும் திருப்திப் படக் கூடியவை அல்ல.

முன்னர் ஒரு காலத்தில் தெற்காசிய பிராந்தியத்தின் முதன்மை பாத்திரத்தை வகித்த இந்தியாவினால் இப்போது அவ்வாறு செயற்படக் கூடிய நிலை இல்லை. மாலைதீவு சீனா பக்கம் சென்று விட்டது. பாகிஸ்தான் ஏற்கனவே எதிரியாகவே இருந்து வருகிறது. நேபாளத்திலும் இந்தியாவின் செல்வாக்கு சரிந்து விட்டது. பங்களாதேஷ், இலங்கை போன்ற நாடுகள் ஒட்டியும் ஒட்டாமலும் தான் இருக்கின்றன.

ஆட்சி மாற்றங்களே புது டில்லியுடனான உறவுகளை தீர்மானிக்கின்றன. பூட்டான் மட்டுமே இந்தியாவுடன் ஒட்டிக் கொண்டிருக்கிறது. பிராந்தியத்தில் இந்தியா 'அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை' என்ற கொள்கையை கடைப்பிடிப்பதாக கூறினாலும், பா.ஜ.க. அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர், அந்த நிலைமை திருப்தியானதாக இல்லை என்பதே உண்மை.

முன்னர் உலகின் ஒரே இந்து நாடாக விளங்கிய நேபாளம், 2006இல் தன்னை மதச்சார் பற்ற நாடாக பிரகடனம் செய்து கொண்டது. ஆனால், மதச்சார்பற்ற நாடான இந்தியாவை, பா.ஜ.க. இந்து நாடாக மாற்றும் இலக்குடனேயே செயற்பட்டது. இது பௌத்தம், இஸ்லாம் போன்ற மதங்களைச் சேர்ந்தவர்கள் அதிகம் வாழ்கின்ற பங்களாதேஷ், மாலைதீவு, இலங்கை போன்ற நாடுகளில் இந்தியா தொடர்பான எதிர்மறையான தோற்றம் உருவாவதற்குக் காரணமாகியிருக்கிறது. பாகிஸ்தானுடன் நிரந்தரமான பகைமை உருவாக்கப்பட்டு விட்டது. மாலைதீவு 5 ஆண்டுகளுக்கு ஒரு ஆட்சி மாற்றம் நிகழும் போது இந்தியாவின் பேச்சை கேட்பது இல்லை. இலங்கையிலும் கிட்டத்தட்ட அதே போன்ற நிலைதான்.

இவ்வாறாக தெற்காசிய பிராந்தியத்தில் இந்தியாவின் வெளியுறவு கொள்கையை சமமான நிலையில் முன்னெடுத்துச் செல்வதில் பா.ஜ.க. குழப்பங்களை விளைவித்திருக்கிறது. இந்திய வெளியுறவு சேவை மூத்த அதிகாரிகளாக இருந்த பலர், பா.ஜ.க.வின் பிரமுகர்களாக மாறியிருக்கிறார்கள். இந்திய வெளியுறவு செயலாளராக இருந்த, எஸ். ஜெய்சங்கர் வெளியுறவு அமைச்சரானார்.

இந்திய வெளியுறவு அமைச்சில் முக்கியமான இராஜதந்திரியாக இருந்த ஹர்தீப் சிங் பூரி வெளியுறவு இணை அமைச்சரானார். இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராக இருந்த தரன்ஜித்சிங் சந்து பா.ஜ.க.வில் இணைந்து பஞ்சாபின் அமிர்தசரஸ் தொகுதியில் போட்டியிட்டிருந்தார். ஆனால் அவரால் இந்த தேர்தலில் வெற்றிபெற முடியவில்லை.

காங்கிரஸ், ஆம் ஆத்மி வேட்பாளர்கள் முதல் இரண்டு இடங்களை பிடிக்க பா.ஜ.க. வேட்பாளரான தரன்ஜித் சிங் சந்து மூன்றாவது இடத்தையே பிடிக்க முடிந்தது. சுயாதீனமாக செயற்பட வேண்டிய வெளியுறவு அமைச்சின் உயர் அதிகாரிகளை, அரசியல் வட்டத்துக்குள் கொண்டு வந்தது பா.ஜ.க. அரசு. சுயாதீனமாக செயற்பட முனைந்தவர்களைக் கூட அரசியல் செல்வாக்கை கொண்டு தன் பக்கம் இழுத்துக் கொண்டது.

இதனால் பா.ஜ.க.வின் கொள்கைகளும் நோக்கங்களும் மாத்திரமே வெளிநாடுகளுடனான உறவுகளை பிரதிபலிக்கும் நிலை ஏற்பட்டது. இந்த நிலை நிரந்தரமானதாக இருக்கும் என்று பிரதமர் நரேந்திர மோடி நினைத்துக் கொண்டிருந்தார். பா.ஜ.க.வை பூச்சியத்தில் இருந்து, ஆட்சியில் அமருவது வரை, வளர்ச்சி பெற வைத்தவர் முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய். அவருக்கு அடுத்த நிலையில் இருந்தவர் எல்.கே.அத்வானி. அவர் 75 வயதை எட்டிய போது, திட்டமிட்டு அரசியலில் இருந்து ஒதுக்கப்பட்டார்.

பா.ஜ.க.வில் 75 வயதுக்கு மேல் யாரும் அரசியல் செய்ய மாட்டார்கள் என்று அப்போது அறிவிக்கப்பட்டது. ஆனால் அதே பா.ஜ.க. இன்று, 73 வயதுடைய மோடியை மூன்றாவது முறை பிரதமர் ஆக ஏற்றுக் கொண்டிருக்கிறது. அவர் இன்னும் இரண்டு ஆண்டுகளில் பிரதமர் பதவியிலிருந்து ஒதுங்கிக் கொள்வாரா? நிச்சயமாக இல்லை.

மோடிக்கு வயது கட்டுப்பாடு எல்லாம் பொருந்தாது என்று பா.ஜ.க. தலைவர்கள் இப்போது கூறுகிறார்கள். காலத்துக்கும் சந்தர்ப்பத்துக்கும் ஏற்றவாறு பா.ஜ.க. தனது நிலையை மாற்றிக் கொள்கிறது என்பதற்கு இதுவும் ஒரு உதாரணம். இப்போது மூன்றாவது முறையாக மோடி பிரதமராகப் பதவியேற்கிறார். ஆனால் அவருக்கு இந்த முறை தனி பெரும்பான்மை இல்லை. கடந்த ஐந்து ஆண்டுகளில் பிரதமர் மோடியும் அவரது கட்சியும் அவரது ஆட்சியும் நடந்து கொண்டது போல, அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளில் நடந்து கொள்ள முடியாது. ஏனென்றால் அவர் சற்று அயர்ந்து போனாலும், அவருக்கு முண்டு கொடுத்துக் கொண்டிருக்கின்ற கட்சிகளை, இழுத்துக் கொண்டு போய் ஆட்சி அமைக்கக் கூடிய வல்லமையுடன் இருக்கிறது 'இந்தியா' கூட்டணி.

சந்திரபாபு நாயுடு தலைமையிலான தெலுங்கு தேசம், நிதிஷ்குமார் தலைமையிலான ஐக்கிய ஜனதா தளம் போன்ற கட்சிகளின் தயவுடன் தான் நரேந்திர மோடி ஆட்சி அமைக்கிறார். இந்த கட்சிகளை மீறி அவர் தன்னிச்சையாக செயற்படவும் முடியாது. அவற்றின் விருப்பங்களை புறக்கணித்து தன் அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொள்ளவும் முடியாது. இந்த சிக்கலான அரசியல் சூழலில் நரேந்திர மோடி அரசாங்கம், பிராந்திய அரசியலில் இன்னும் சிக்கலான சூழலை எதிர்கொள்வதற்கே வாய்ப்புகள் அதிகம்.


இலங்கையில் நடக்கப் போகின்ற தேர்தல்கள் அதற்கு முதல் சவாலாக இருக்கும். இந்த தேர்தலில் இந்தியா யாரை ஆதரிக்கப் போகிறது அல்லது யார் ஆட்சிக்கு வருவதை தடுக்கப் போகிறது? 2015 ஜனாதிபதி தேர்தலில் ,ந்திய புலனாய்வு பிரிவு தலையீடு செய்ததாக குற்றம் சாட்டியிருந்தார் மஹிந்த ராஜபக்ஷ. அப்போது ஆட்சிக்கு வந்து ஒரு வருடத்தைக் கூட கடந்திராத நரேந்திரமோடி அரசாங்கத்தின் மீது அவர் பழி போடவில்லை. இந்திய புலனாய்வு பிரிவின் மீதே அவர் அந்தப் பழியைப் போட்டார்.

முன்னர் ஐ.பி எனப்படும், இந்திய புலனாய்வுப் பிரிவின் தலைவராக இருந்த அஜித் டோவல், நரேந்திரமோடி அரசாங்கத்தில் தேசிய பாதுகாப்பு ஆலோசராக பதவி வகித்திருந்தார். பா.ஜ.க. தனிப் பெரும்பான்மை பெற்ற பின்னர் மோடியின் இரண்டாவது ஆட்சிக் காலத்தில் மத்திய கெபினட் அமைச்சருக்கு இணையான பதவியாக, அஜித் டோவலின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பதவி தரம் உயர்த்தப்பட்டது.

சீனாவுடனான முரண்பாடுகள், பாகிஸ்தானுடன் மோதல்கள் விடயத்தில் மாத்திரமன்றி இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களிலும் அஜித்டோவலின் தலையீடுகள் இருந்தன. கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இவருக்கும் சில விடயங்களில் நேரடியான முரண்பாடுகளும் ஏற்பட்டிருந்தன. ஆனால் நரேந்திர மோடியின் மூன்றாவது ஆட்சி காலத்தில், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பதவியிலிருந்து அஜித் டோவல் மாற்றப் படலாம் என சில மாதங்களுக்கு முன்னர் தகவல்கள் வெளியாகி இருந்தன. அது நடக்குமா? நடக்காதா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். அஜித் டோவல், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பதவியில் இருந்து நீக்கப்படும் நிலை ஏற்பட்டால், இந்தியாவின் வெளியுறவு கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்படக்கூடும்.

இலங்கையுடனான, இந்தியாவின் உறவுகள் சிறப்பானதாக இருப்பதாக இரண்டு நாடுகளின் தலைவர்களும் கூட கூறிக் கொண்டாலும், ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கையற்ற நிலையே இன்றைக்கும் நீடிக்கிறது. என்னதான் இந்தியா, இலங்கையை காப்பாற்றுகின்ற அணுகுமுறையை கையாண்டாலும் எந்த நேரத்தில் சீனா இழுத்துக் கொண்டு போய் விடுமோ அந்த பயம் அதற்கு இருக்கத் தான் செய்கிறது. இந்த பயத்துக்கும் நரேந்திரமோடி அரசாங்கத்தின் 10 ஆண்டு கால (22ம்பக்கம் பார்க்க)

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)


ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறப் போவது யார்?

கட்டுரையாளர்:-
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -









அக்சஸ் மை இந்தியா’ என்பது இந்தியாவில் நுகர்வோர் தரவுகளை புலனாய்வு செய்யும் முன்னணி நிறுவனமாகும். தங்களின் தரவுகள் 95 விகிதம் சரியானது என்பது அவர்களது கணிப்பு. ஆனால் இதன் நிறைவேற்று இயக்குனர் பிரதீப் குப்தா, இந்தியா டுடேயின் குழுக் கலந்துரையாடல் நிகழ்வொன்றின் போது தேம்பி அழுகின்ற காட்சியொன்று சில நினங்களுக்கு முன்னர் வெளியாகியிருந்தது. ஏன் அவர் அழுதார்? பாரதீய ஜனதா கட்சியின் நேர்தல் வெற்றி தொடர்பான குப்தாவின் கணிப்பு படுமோசமான தோல்வியைச் சந்தித்திருக்கின்றது. பி.ஜே.பி. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி 361 - 401 வரையான ஆசனங்களைப் பெற்று, வெற்றி பெறுமென்று குப்தா கணிப்பிட்டிருந்தார்.

ஆனால் பாரதீய ஜனதா கட்சி அதன் பெரும்பான்மையை இழந்து கூட்டணிக் கட்சிகளின் ஆதரவின்றி ஆட்சியமைக்க முடியாதளவிற்கு தோல்வியுற்றிருக்கின்றது. இது தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வொன்றில் கேள்விக்கு பதிலளிக்க முடிலாமல் போன போதே குப்தாவின் கண்கள் கசிந்தது. குப்தாவின் நூல்களின் முகப்பில் இந்தியாவின் முதல்தர தேர்தல் மதிப்பீட்டாளர் என்று குறிப்பிடப்பட்டிருக்கும். இனி அவரால் தன்னை அவ்வாறு கூறிக் கொள்ள முடியாது.

தேர்தல் வெற்றிகள் தொடர்பான முன்கூட்டிய கணிப்புகள் எந்தளவிற்கு சரியானது? தேர்தல் வெற்றி தொடர்பான முன்கூட்டிய கனிப்புகளை நம்புவது எந்தளவு ஆபத்தானது? என்பதற்கு இந்தியாவின் லோக்சபா தேர்தல் சிறந்ததொரு எடுத்துக் காட்டாகும். ஏனெனில் பல்வேறு சுயாதீன பிரிப்புகள் பாரதிய ஜனதாகட்சியின் வெற்றி குறித்த கணிப்புகளாகவே இருந்தன. ஆனால் நிலைமை தற்போது மாறியிருக்கின்றது.

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் வெற்றி வாய்ப்புகள் தொடர்பில் சுகாதாரக் கொள்கைகளுக்கான நிறுவனம் சில கருத்துக் கணிப்புகளை வெளியிட்டிருக்கின்றது. இது ஒரு அரசுசாரா நிறுவனமாகும். இந்த அமைப்பு மார்ச் மாதம் வெளியிட்ட கருத்துக் கணிப்பின்படி, ஜனாதிபதி விக்கிரமசிங்க மிகவும் பின்தங்கிய நிலையில் தான் இருக்கின்றார்.

அதாவது, மாற்றமின்றி தொடர்ந்தும் 8 விகிதமான ஆதரவு உடன் இருக்கின்றார். இந்தக் கணிப்பின்படி, ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் போட்டியிடும் தகுதி நிலையில் இல்லை, ஏனெனில், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஒருவர், ஆகக்குறைந்தது 25 விகிதமான ஆதரவுடனாவது இருக்க வேண்டும். 8 விகிதம் என்பது ரணில் எந்த வகையிலும் பிரதான போட்டியானராக வரமுடியாது என்னும் நிலைமையையமே காண்பிக்கின்றது.

குறித்த நிறுவனம் இந்த ஆண்டு மார்ச் மாதம் வெளியிட்ட கருத்துக் கணிப்பின்படி, பிரதான போட்டியாளர்களாக அநுரகுமார திசாநாயக்கவும் சஜித் பிரேமதாசவுமே இருக்கின்றனர். சஜித் பிரேமதாச 43 விகித ஆதரவைப் பெற்று முன்னணியில் இருக்கின்றார். அதுவரையில் முன்னணியில் இருந்த அநுரகுமார திசாநாயக்க 42 விகிதமானவர்களால் ஆதரிக்கப்படுகின்றார். அநுரகுமாரவின் ஆதரவு 44 விகிதத்திலிருந்து 42 விகிதமாக குறைவடைந்திருக்கின்றது. மகிந்த ராஜபக்ச தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 7 விகிதமான ஆதரவையே கொண்டிருக்கின்றது,

குறித்த அமைப்பு, இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் வெளியிட்ட கருத்துக் கணிப்பில், அநுரகுமார திசாநாயக்க 53 விகிதமான ஆதரவைப் பெற்று முன்னணியில் இருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. சஜித் பிரேமதாச 35 விகிதமான ஆதரவுடன் இரண்டாம் நிலையிலிருந்தார். ரணில் விக்கிரமசிங்க 6 விகிதமான ஆதரவைப் பெற்றிருந்தார். ஜனவரி மாதத்தில் வெளியிட்ட கருத்துக் கணிப்பில் அநுர பெரும் ஆதரவுடன் முன்னணியில் இருந்தும், சஜித் பிரேமதாச 36 விகிதமான ஆதரவுடன் இருந்தார். ரணில் 7 வீதமான ஆதரவைப் பெற்றிருந்தார். சுகாதாரக் கொள்கைகளுக்கான நிலையம் ஆகஸ்ட் 2023இல் வெளியிட்ட கருத்துக் கணிப்பின்படி அநுரகுமார திசாநாயக்க 38 வீதமான ஆதரவைப் பெற்று முன்னணியில் இருந்தார். பிரேமதாச 35 விகிதமான ஆதரவைப் பெற்றிருத்தார். ரணில் விக்கிரமசிங்க. 18 வீதமான ஆதரவைப் பெற்றிருந்தார்.

இந்த கணிப்புகளின் அடிப்படையில் தான் தேர்தல் வெற்றிகள் தொடர்பான அபிப்பிராயங்கள் உருவாக்கப்படுகின்றன, மாதாந்த அடிப்படையில் அண்ணளவாக தெரிவு செய்யப்படும் 553 நபர்களின் அபிப்பிராயங்களின் அடிப்படையிலேயே இந்தக் கணிப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. தேர்தல் ஆணையத்தின் 2022 தரவுகளின்படி 16,692,328 வாக்காளர்கள் இருக்கின்றனர். இந்தளவு வாக்காளர்களின் மனநிலையை அண்ணளவான அபிப்பிராயங்கள் மூலம் அறிய முடியுமா என்பது ஒரு கேள்வி.

இந்த கருத்துக் கணிப்பின் அடிப்படையில் சிந்திப்பதாயின் அநுரகுமார திசாநாயக்கவும் சஜித் பிரேமதாசவுமே பிரதான போட்டியாளர்கள் என்னும் முடிவுக்கே ஒருவர் வர வேண்டியிருக்கும். ஆனால் இது எந்தளவிற்கு சரியானது என்பது தான் கேள்வி. ஏனெனில் மனிதர்களின் மனோநிலையை அளவிடுவது முடியாத காரியமாகும். சாதாரண மக்கள் குறித்த சூழ்நிலையை கருத்தில் கொண்டே முடிவுகளை எடுப்பர்.

அதே வேளை சுகாதாரக் கொள்கைகளுக்கான நிலையத்தின் கருத்துக் கணிப்பின் தரவுகள் குழப்பமானதாகவும் ,ருக்கின்றது. உதாரணமாக ஆகஸ்ட் 2023 இல் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பின்படி ரணில் விக்கிரமசிங்க 18 வீதமான ஆதரவை பெற்றிருக்கின்றார். ஆனால் மார்ச் மாதத்தின் கருத்துக் கணிப்பில் 8 வீதமான ஆதரவையே பெற்றிருக்கின்றார். அதேவேளை அநுரகுமார திசாநாயக்கவும் சஜித் பிரேமதாசவும் முன்னணியில் இருப்பதாகவே கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன. ஏன் அவர்கள் முன்னணியில் இருக்கின்றனர்? அவர்களை மக்கள் விரும்புவதற்கு என்ன காரணம்? குறிப்பாக அநுரகுமார திசாநாயக்க 2019 ஜனாதிபதித் தேர்தலில் 3 விகிதமான வாக்குகளைப் பெற்றிருந்தார். அவர் 43 வீதமான ஆதரவைப் பெறுவதென்பது அசாத்தியமான ஒன்று.

சாதாரணங்ளை மக்கள் பொருளாதார விடயங்களுக்கு முன்னுரிமை அளித்தால், அவர்களின் தெரிவாக ரணில் விக்கிராரிங்கவே இருந்திருக்க வேண்டும். ஆனால் கருத்துக் கணிப்பின்படி ரணிலை பெரும்பாலான மக்கள் விரும்பவில்லை. அவ்வாறாயின் பொருளாதாரப் பிரச்சினைக்கு அப்பால் எதனை மக்கள் விரும்புகின்றனர்? கோத்தாபய ராஜபக்ஷவின் வீழ்ச்சியைத் தொடர்ந்தே ஜே.வி.பி. தென்னிலங்கை அரசியலில் பிரதான பேசுபொருளானது. கோத்தாபய ராஜபக்ஷ, சிங்கள மக்களின் ஏகோபித்த ஆதரவை பெற்றிருந்த ஒருவர், நம்நாட்டு அரசாங்கத்தின் உள்முரண்பாடுகளும் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்ட அச்ச உணர்வுமே கோத்தாபய ராஜபக்ஷவை நோக்கி சிங்கள மக்கள் திரும்புவதற்கான முதன்மையான காரணமாகும். ஒரு வேளை ஈஸ்டர் தாக்குதல் இடம் பெறாதிருந்தால் கோத்தாபயவை நோக்கி சிங்கள மக்கள் பெருமளவில் திரும்பும் நிலைமை ஏற்பட்டிருக்காது.

கோத்தாபயவின் வீழ்ச்சியைத் தொடர்ந்து சிங்கள மக்களுக்கு தலைமை தாங்கக்கூடிய தகுதிநிலை யாருக்குண்டு என்னும் கேள்வி எழுந்திருக்கின்றது. கோத்தாபயவை அதிகாரத்திலிருந்து அகற்றும் அரகலா மக்கள் கிளர்ச்சியில் ஜே.வி.பி. பிரதான பங்கு வகித்திருந்தது. இந்தப் பின்புலத்தில் தான் அநுரகுமார திசாநாயக்க அதிக கவனிப்புக்குரிய ஒருவரானார். அநுரகுமார திசாநாயக்க சுவீடனில் பேசுகின்ற போது கோத்தாபயவின் வீழ்ச்சிக்குப் பின்னர் சிங்கள மக்களுக்கான தெரிவு தாங்கள் மட்டுமே என்று குறிப்பிட்டிருந்தார்.

இதன் மூலம், சிங்கள மக்களை பாதுகாக்கும் வல்லமை தங்களுக்கு மட்டுமே உண்டென்று அவர் கூறுகின்றார் போலும். சுகாதாரக் கொள்கைகளுக்கான நிலையத்தின் கருத்துக் கணிப்பு முற்றிலும் தென்பகுதியை அடிப்படையாகக் கொண்டதாகவே தெரிகின்றது. ஏனெனில் கருத்துக் கணிப்பில் குறிப்பிடப்பட்டிருப்பது போன்று ஒருவேளை அநுரகுமாடி திசாநாயக்க முன்னணியில் இருப்பது உண்மையென்று எடுத்துக் கொண்டாலும் கூட, எண்ணிக்கையில் சிறுபான்மையான மக்கள் மத்தியில் அநுரகுமார முன்னணி வகிப்பதற்கான காரணங்கள் எதுவுமில்லை. இந்தப் பின்புலத்தில் நோக்கினால், சிறுபான்மை மக்கள் மத்தியில் பிரதான போட்டியாளர்கள் ரணில் விக்கிரமசிங்கவும் சஜித் பிரேமதாசவும் தான். இந்த ஜனாதிபதித் தேர்தலை பொறுத்தவரையில், எண்ணிக்கையில் சிறுபான்மையான மக்களின் வாக்குகளே பிரதான பங்கை வகிக்கப் போகின்றன. ராஜபக்ஷ ஆதரவுடன் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவாராக இருந்தால் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் ஆதரவைப் பெறுவதில் சிக்கல்கள் ஏற்படும். தமிழ் மக்களை பொறுத்தவரையில் கடந்த 3 ஜனாதிபதித் தேர்தல்களின் போதும் ராஜபக்ஷ எதிர்ப்பு என்னும் அடிப்படையிலேயே தமிழ் மக்களின் வாக்குகள் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றன. எனவே ரணில்– ராஜபக்ஷ கூட்டணியை நோக்கி தமிழ் மக்களின் வாக்குகளை திருப்புவது மிகவும் சவாலானது. இந்த பின்புலத்தில் நோக்கினால், தமிழ் மக்களின் வாக்குகள் அதிகம் சஜித் பிரேமதாசவை நோக்கிச் செல்வதற்கே வாய்ப்புண்டு. தமிழ் மக்களை திருப்திப்படுத்தக்கூடிய எந்தவொரு நிலைப்பாடும் அநுரகுமாரவிடம் இல்லை. பெரும்பாலான தமிழ் மக்கள் ஜே.வி.பி. யை சிங்கள கடும் போக்குவாத தேசியவாத அமைப்பாகவே நோக்குகின்றனர். தமிழ் அரசியல் சமூகம், அரசியல் ரீதியில் ராஜபக்ஷ அணிக்கும் ஜே.வி.பி.க்கும் இடையில் பெரிய வேறுபாட்டை காண முயற்சிப்பதாக தெரியவில்லை.விடுதலைப்புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தத்தின் போது, ஜே.வி.பி. பெரியளவில் பங்களித்ததாகவே தமிழ் அரசியல் சமூகம் கருதுகின்றது. அவ்வாறானதொரு பார்வையே சாதாரண தமிழ் மக்கள் மத்தியிலுமுண்டு.

அதேவேளை, ஒப்பீட்டடிப்படையில் ஜே.வி.பி. தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் உறுதியான எந்தவொரு நிலைப்பாட்டையும் வெளியிடவில்லை. ஆகக்குறைந்தது அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் கூட ஜே.வி.பி. பொது வெளியில் அதன் நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை. ரணில் விக்கிரமசிங்க பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த 13 ஆவது திருத்தச் சட்டம் பற்றி பேசுகின்றார். சஜித் பிரேமதாச, 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் பொதுவாகப் பேசுகின்றார். தமிழ் அரசியல் சமூகத்தை பொறுத்தவரையில் தேசிய இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வை காணும் விடயத்தில் தென்னிலங்கை வேட்பாளர்கள் எவரையும் நம்பும் நிலையில் இல்லை.

இவ்வாறானதொரு பின்புலத்தில் தான், தமிழ் அரசியல் சமூகத்தின் ஒரு பகுதியினர் தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் உரையாடி வருகின்றனர். தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு வெற்றியளிக்குமாக இருந்தால், தென்னிலங்கையில் எந்தவொரு வேட்பாளரும் 50 விகிதமான வாக்குகளை பெற முடியாத நிலைமையே ஏற்படும்.

இந்த விடயங்களை தொகுத்து நோக்கினால், ஜனாதிபதித் தேர்தலில் எவர் வெற்றி பெறுவார் என்பது இதுவரையில் ஒரு புதிரான விடயமாகும். ஆனால் நிச்சயம் எண்ணிக்கையில் சிறுபான்மையான மக்களின் பெரும்பான்மை ஆதரவை. குறிப்பாக தமிழ் மக்களின் ஆதரவை பெறும் ஒருவராலே அந்தக் கதிரையை கைப்பற்ற முடியும். அது ரணிலா சஜித்தா அநுரகுமாரவா என்பது தான் கேள்வி, ஆனால் நிச்சயமாக, ,ந்த மூன்றில் ஒருவர் தான், அந்தக் கதிரையில் இருப்பார்.

# மாநில அந்தஸ்தை எட்டும் நாம் தமிழர் கட்சி! 12 இடகளில் 1 லட்சம் வாக்கு! 7 முக்கிய அம்சங்கள்!

நீதிமன்றம் சென்றும் கிடைக்காத சின்னத்தை மக்கள் மன்றம் தந்த தீர்ப்பின் மூலம் பெறப் போகிறோம்' என்று உற்சாகத்துடன் கூறுகிறார் நாம் தமிழர் கட்சியின் இளைஞர் பாசறை ஒருங்கிணைப்பாளர் இடும்பாவனம் கார்த்தி.

ஆம். தேர்தலுக்குத் தேர்தல் தனது வாக்கு வங்கியைத் தொடர்ந்து உயர்த்திக் கொண்டே வரும் நாம் தமிழர் கட்சி இந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் அதைச் சாதித்துக் காட்டியுள்ளது. இதன் மூலம் மாநிலக் கட்சி என்ற அந்தஸ்தை பெறும் அளவுக்கான வாக்குகளை அந்தக் கட்சி பெற்றுள்ளது. திமுக, அதிமுக ஆகிய இருபெரும் திராவிடக் கட்சிகள், தமிழ் நாட்டில் வேரூன்ற சகல வழிகளிலும் முயலும் பாஜக ஆகியவற்றின் சவால்களைத் தாண்டி நாம் தமிழர் கட்சி தனது வாக்கு வங்கியைத் தொடர்ந்து அதிகரித்தது எப்படி? நாம் தமிழர் கட்சி இந்த மைல்கல்லை எப்படி எட்டியது?

## பொதுத் தேர்தலில் நாம் தமிழர் கட்சி

நாம் தமிழர் கட்சி 2010இல் தொடங்கப்பட்டது. தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தலைமையில் கடந்த 2016ஆம் ஆண்டு முதல் அக்கட்சி தேர்தலில் போட்டியிடத் தொடங்கியது. நாம் தமிழர் கட்சி அந்த ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலில் 234 தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிட்டு 1.1 சதவிகித வாக்குகளைப் பெற்றது. ஓரிடம் கூடக் கிடைக்கவில்லை.

கடந்த 2019ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் மொத்தமுள்ள 40 தொகுதிகளில் நாம் தமிழர் கட்சி ஆண், பெண் இரு பாலருக்கும் சரி பாதி தொகுதிகளை ஒதுக்கியது. அதாவது, அக்கட்சி சார்பில் 20 தொகுதிகளில் ஆண்களும், 20 தொகுதிகளில் பெண்களும் வேட்பாளர்களாகக் களமிறங்கினர்.

கடந்த 2019ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் நாம் தமிழர் கட்சிக்கு 3.9 சதவிகித வாக்குகள் கிடைத்தன. அந்தத் தேர்தலில் முதன் முறையாகக் களமிறங்கிய டிடிவி தினகரனின் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் 5.5 சதவிகித வாக்குகளையும், கமல் ஹாசன் தலைமையிலான மக்கள் நீதி மய்யம் 3.7 சதவிகித வாக்குகளையும் பெற்றன.

அடுத்து வந்த 2021ஆம் ஆண்டு சட்டப் பேரவைத் தேர்தலில் நாம் தமிழர் கட்சி 6.58 சதவிகித வாக்குகளைப் பெற்றது. 170க்கும் அதிகமான தொகுதிகளில் மூன்றாவது இடத்தைப் பிடிக்கும் அளவுக்கு வாக்குகளைப் பெற்றனர். திமுக, அதிமுக ஆகிய கட்சிகளுக்கு அடுத்தபடியாக அதிக வாக்குகளைப் பெற்ற மூன்றாவது பெரிய கட்சியாக நாம் தமிழர் உருவெடுத்தது.

## 2024 நாடாளுமன்றத் தேர்தலில் நாம் தமிழர் கட்சி

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளும் நாம் தமிழர் கட்சியினருக்கு உற்சாகம் தரும் வகையிலேயே அமைந்துள்ளன.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் மொத்தமுள்ள 40 தொகுதிகளிலும் சேர்த்து மொத்தம் 32 லட்சத்திற்கும் அதிகமான வாக்குகளை நாம் தமிழர் கட்சி பெற்றுள்ளது.

திருவள்ளூர், ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், சிவகங்கை, தூத்துக்குடி, தென்காசி ஆகிய 12 தொகுதிகளில் நாம் தமிழர் கட்சி ஒரு லட்சத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றுள்ளது.



திருச்சி, நாகப்பட்டினம், ஈரோடு, கள்ளக்குறிச்சி, கன்னியாகுமரி ஆகிய 5 தொகுதிகளில் நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் மூன்றாவது இடத்தைப் பிடித்தனர். மற்ற 35 தொகுதிகளிலும் அக்கட்சி நான்காவது இடத்தைப் பிடித்துள்ளது. மத்திய மற்றும் டெல்டா பகுதிகளில் நாம் தமிழர் கட்சி கணிசமான வாக்குகளைப் பெற்றுள்ளது.

நாம் தமிழர் கட்சியைப் பொருத்தவரை, சிவகங்கை தொகுதியில் அதிக பட்ச வாக்குகளைப் பெற்றுள்ளது. அக்கட்சி வேட்பாளர் எழிலரசி 1,63,412 வாக்குகளுடன் நான்காவது இடத்தைப் பிடித்துள்ளார்.

கன்னியாகுமரி தொகுதியில் நாம் தமிழர் கட்சி குறைந்த அளவாக 52,721 வாக்குகள் பெற்றுள்ளது. ஆனாலும் கூட, அதிமுகவை பின்னுக்குத் தள்ளி அக்கட்சி வேட்பாளர் மரியா ஜெனிபர் கிளாரா மைக்கேல் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

சட்டமன்றத் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் வரிசையில் நாம் தமிழர் கட்சி சந்தித்த நான்காவது பொதுத் தேர்தல் இது. மாநிலக் கட்சி என்ற அங்கீகாரத்தைப் பெறுவதற்கான குறைந்தபட்ச வாக்கு சதவீதமான 8%-ஐ இந்தத் தேர்தலில் எட்டியுள்ளது.

தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 39 தொகுதிகளிலும் சேர்த்து நாம் தமிழர் கட்சிக்கு 8.1 சதவீத வாக்குகள் கிடைத்துள்ளன. இதன் மூலம் நாம் தமிழர் கட்சி மாநிலக் கட்சி என்று தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்படும் நிலையை எட்டியுள்ளது.

## சின்னம் ஒதுக்குவதில் சர்ச்சை

நாம் தமிழர் கட்சி முந்தைய தேர்தல்களில் போட்டியிட்ட கரும்பு விவசாயி சின்னம் இந்த நாடாளுமன்றத் தேர்தலில் கிடைக்கவில்லை. கடந்த ஆண்டு இறுதியில் அந்த சின்னத்தை கர்நாடகாவை சேர்ந்த ஒரு கட்சிக்கு ஒதுக்கி விட்டதால் நாம் தமிழர் கட்சிக்கு அந்தச் சின்னத்தை ஒதுக்க முடியாது என்று தேர்தல் ஆணையம் கூறியது.

தேர்தல் ஆணையத்தின் முடிவை எதிர்த்து, நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் டெல்லி உயர்நீதிமன்றத்தை நாடினார். ஆனால், "தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கையில் என்ன தவறு இருக்கிறது. முதலில் வருபவருக்கு முன்னுரிமை என்ற ஆணையத்தின் நடைமுறையை எந்தக் கட்சிக்காகவும் மாற்ற முடியாது. நாம் தமிழர் கட்சி இன்னும் ஆணையத்தால் அங்கீகரிக்கப்படாத கட்சி. அப்படியிருக்கும்போது எப்படி ஒரு குறிப்பிட்ட சின்னத்தை உரிமை கோர முடியும்?' எனக் கேள்வி எழுப்பிய நீதிமன்றம் மனுவை தள்ளுபடி செய்தது. நீதிமன்றத்தை நாடியும் விரும்பியது கிடைக்காததால் வேறு வழியின்றி மைக் (ஒலி வாங்கி) சின்னத்தில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள 40 தொகுதிகளிலும் நாம் தமிழர் கட்சி போட்டியிட்டது. அப்போது பிபிசி தமிழிடம் பேசிய நாம் தமிழர் கட்சியின் இளைஞர் பாசறை ஒருங்கிணைப்பாளர் இடும்பாவனம் கார்த்தி, 'கரும்பு விவசாயி சின்னத்தைக் கொடுத்தால் அதிக வாக்குகள் பெற்று நாம் தமிழர் கட்சி அங்கீகரிக்கப்பட்ட கட்சியாவதைத் தடுக்கவே, இப்படி சதி செய்துள்ளார்கள், என்று குற்றம் சாட்டியிருந்தார்.

## நீதிமன்றம் தராததை மக்கள் மன்றத்தின் மூலம் பெறுகின்றோம்

தேர்தல் முடிவுகள் வெளியானதற்குப் பின்னர் பிபிசி தமிழிடம் பேசிய இடும்பாவனம் கார்த்தி, 'நாடாளுமன்றத் தேர்தலுக்கான சின்னங்கள் ஒதுக்கீட்டில் எங்களுக்கு அநீதி இழைக்கப் பட்டது.என்றார். நாங்கள் தேர்தலில் சின்னங்கள் பயன் படுத்தப்படுவதை எதிர்க்கிறோம். அதற்குப் பதிலாக, மேற்கத்திய நாடுகளைப் போல் ஒவ்வொரு வேட்பாளருக்கு ஒரு எண்ணை ஒதுக்க வேண்டும். அல்லது ஒவ்வொரு தேர்தலின் போதும் கட்சிகளின் சின்னத்தை மாற்ற வேண்டும். அது தான் தேர்தல் களத்தில் சரிசமமான போட்டிக்கு வழி வகுக்கும்.'

சின்னங்கள் வேட்பாளர்களுக்கு சில சாதகங்களை அளிக்கின்றன என்பதை மறுக்க முடியாது என்கிறார் அவர். 'விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வேட்பாளர்கள் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும்போது வெற்றி எளிதாகக் கிடைக்கும். அதேநேரத்தில், பானை சின்னத்தில் களம் காணும் போது வெற்றி கடினமாவதைப் பார்க்க முடிகிறது.'

இது, அதிமுகவின் இரட்டை இலை சின்னத்திற்கும் பொருந்துவதாகக் கூறும் அவர், சின்னங்கள் பயன்பாட்டிற்கு எதிரானவர்கள் என்ற போதிலும் நம் நாட்டு நடைமுறையைப் பின்பற்றி தங்கள் கொள்கைக்கு கரும்பு விவசாயி சின்னமே பொருத்தமானது என்று தீர்மானித்தே அதைத் தேர்வு செய்ததாகக் கூறினார்.

## நாம் தமிழர் கட்சிக்கு தேர்தல் களம் எப்படி இருந்தது?

நாடாளுமன்றத் தேர்தல் களம் நாம் தமிழர் கட்சிக்கு எப்படி இருந்தது என்ற கேள்விக்கு, 'இது நாடாளுமன்றத் தேர்தல் களம் என்பதால் சற்று சவாலானதாகவே இருக்கும் என்று கருதினோம். ஏனெனில், நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் வேட்பாளரே பிரதானம். நாங்களோ பாஜகவையோ, காங்கிரசை உள்ளடக்கிய இந்தியா கூட்டணியையோ ஆதரிக்கவில்லை. ஆகவே, மோதி, ராகுல் போன்ற யாரையும் எங்களால் பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்த முடியாது.'

ஆனால்எங்கள் எண்ணத்திற்கு மாறாக தேர்தல் களம் எங்களுக்கு மிகுந்த உற்சாகம் தருவதாக அமைந்திருந்தது. முன்பெல்லாம் இளைஞர் மத்தியில் எங்களுக்கு வரவேற்பு அதிகம் இருக்கும். இப்போது குடும்பம் குடும்பமாகப் பலரும் தாமாகவே விரும்பி வந்து கட்சியில் சேர்கின்றனர்.'

அவர்கள் அனைவரும் தேர்தலில் எங்களை ஆதரித்தனர். திமுக, அதிமுக, காங்கிரஸ், பாஜக போன்ற கட்சிகளைப் போல் எங்களிடம் இல்லாத ஒன்று பணம் மட்டும் தான். ஒவ்வொரு தொகுதியிலும் பெரிய கட்சிகளின் வேட்பாளர்கள் சர்வ சாதாரணமாக கோடிகளில் பணத்தைச் செலவழிக்கும் போது எங்களால் லட்சங்களில் கூடச் செலவழிக்க முடியாது.' என்றார்.

## நாம் தமிழர் கட்சியின் வளர்ச்சி சாத்தியமானது எப்படி?

நாம் தமிழர் கட்சி சந்தித்த 4 பொதுத் தேர்தல்களிலும் தொடர்ச்சியாகத் தனது வாக்கு சதவீதத்தை உயர்த்தி வந்துள்ளது. இது எப்படி சாத்தியமானது என்று தமிழ்நாட்டின் அரசியல் நகர்வுகளை உன்னிப்பாகக் கவனிக்கும் மூத்த பத்திரிகையாளர் சிகாமணியிடம் கேட்டபோது, 'மதவாதம் போல் இன வாதமும் உணர்ச்சி ரீதியாக மக்களை ஈர்க்கக் கூடியது. வளர்ந்த நாடுகளில் கூட இந்தப் போக்கு உள்ளது. அமெரிக்காவில் டிரம்பை கூட நீங்கள் இதற்கு உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். அது போலவே தமிழ் நாட்டிலும் இனவாதம் பேசும் நாம் தமிழர் கட்சி மக்களை ஈர்க்கிறது.' என்றார்.

மேலும், சுய பெருமை பேசுவது ஒன்றும் குற்றம் இல்லை. ஆனால், பிற மாநிலத்தவர் குறிப்பாக வட மாநிலத்தவர் மீது வெறுப்புணர்வை விதைக்கும் வகையில் பேசுவது தவறுஎன்றும் அதைத்தான் இனவாதம் எனக் கூறுவதாகவும் குறிப்பிடுகிறார் சிகாமணி. அதே போல் 'எதிலும் தூய்மைவாதம் பேசும் மக்களின் தேர்வாகவும் நாம் தமிழர் கட்சி இருக்கிறது. அதீத தூய்மைவாதம் பேசும் இவர்கள் கற்பனை உலகில் வாழ்பவர்கள், நிகழ் காலத்தில் எதிலுமே திருப்தி கொள்ளாதவர்கள்.'

இனவாதம், தூய்மைவாதம் தாண்டி, இருபெரும் திராவிடக் கட்சிகளுக்கும் மாற்று தேடும் மக்களில் ஒரு பிரிவினரும் நாம் தமிழர் கட்சியை ஆதரிக்கின்றனர். வைகோ, விஜயகாந்த் வரிசையில் இன்று நாம் தமிழர் கட்சியும் அந்த வாக்குகளை அறுவடை செய்கிறது.' என்று கூறினார். மேலும் பேசிய அவர், 'இந்திய ஒன்றிய த்தின் ஒரு பகுதியாக உள்ள தமிழ் நாட்டால் சீமான் பேசுவது போல மத்திய அரசைப் புறக்கணித்து விட்டு எதையும் கண்டு கொள்ளாமல் தனித்து இயங்க முடியாது. நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் வலிமை மிக்க (20ம் பக்கம் பார்க்க)

# தமிழ்த்தேசிய வட்டகையில் நிராகரிக்க முடியாத ஒரு சக்தியாக சுமந்திரன்!

தமிழ்த்தேசிய அரசியலில் எல்லா முடிவையும் எடுக்கும் ஆளாக இப்போது சுமந்திரன் வளர்ச்சியடைந்துள்ளாரா? அல்லது தமிழ்ச் சூழலில் அப்படியொரு நிலை உருவாகியுள்ளதா? அல்லது அப்படிக் கருதப்படுகிறதா?

ஏனென்றால் தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துவதற்கான தீர்மானத்தை வெற்றியடைய வைப்பதற்கும் சுமந்திரன் தேவைப்படுகிறார். தமிழரசுக் கட்சியின் தலைவிதியைத் தீர்மானிப்பதற்கும் சுமந்திரனே தேவையாக இருக்கிறார். ஜனாதிபதித் தேர்தல் உட்பட அனைத்துத் தேர்தல்களையும் கையாள்வது, பதவியில் இருக்கும் ஆட்சியாளர்களோடு தொடர்புகளைப் பேணுவது, அவர்களைக் கையாள்வது, வெளிநாட்டுப் பிரதிநிதிகளோடு பேசுவது, முஸ்லிம்கள், மலையக மக்கள் என ஏனைய சமூகத்தினரோடு அரசியல் உறவைக் கொண்டிருப்பது எனச் சகலவற்றிலும் சுமந்திரனின் அடையாளமும் முன்னணிப்பாத்திரமுமே உள்ளது. இதை மேலும் விரிவாகப் பார்க்கலாம்.

சிலருடைய ஆர்வக் கோளாறினால் விளையாட்டாகத் தொடங்கப்பட்ட தமிழ்ப்பொது வேட்பாளர் விடயம் இப்பொழுது விடவும் முடியாது தொடவும் முடியாத என்ற நிலைக்குள்ளாகியுள்ளது. இருந்தாலும் எப்படியாவது இதை வெற்றியடைய வைக்க வேண்டும் எனச் சிலர் தலையைக் கொடுத்து இரவு பகலாக வேலை செய்கிறார்கள். இதனால் இந்த

தாலும் இந்தத் தேர்தலில் போட்டியிடும் முன்னிலை வேட்பாளர்கள் எல்லோரும் சிங்களவர்கள். இவர்களில் எவரும் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வைத் தரக்கூடியவர்களில்லை. அதைப்பற்றிப் பேசவே தயங்குகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு வாக்களிப்



பதை விட, இந்தத் தேர்தலை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி, சிதறுண்டிருக்கும் தமிழ்த் தரப்பையெல்லாம் ஒன்றாகக் கொண்டு வரலாம். தமிழ் மக்களுடைய நிலைப்பாட்டை தென்னிலங்கைக்கும் சர்வதேச சமூகத்துக்கும்

எட்டியிருக்கலாம். நாட்டை விட்டு வெளியேறுவோரின் தொகையும் கணிசமாகக் குறைந்திருக்கும். இவர்களுடைய சொல்லுக்கும் பெறுமதி கிடைத்திருக்கும். இப்படி ஆட்பிடிப்பதற்கும் ஆதரவு சேர்ப்பதற்குமாக அலைந்து திரிய வேண்டி வந்திருக்காது.

பொது வேட்பாளரைப் பற்றிய பொது விவாதத்தின் போது இவ் வாறான விசயங்கள் எல்லாம் பேசப் படவும் கூடும்.

எனவே ஒரு விடயம் மிகத் தெளிவாகியுள்ளது. தமிழ்த்தேசியப் பரப்பில்,

விடாமுயற்சி விக்கிரமாதித்தியன்களான சிவில் சமூகப் பிரமுகர்கள் கூடச் சில நாட்களுக்கு முன்பு சுமந்திரனைச் சந்திக்க வேண்டியதாயிற்று.

உண்மையில் சுமந்திரனுடன் சந்திப்பைச் செய்வதற்கு இவர்களில் எவருக்கும் உடன்பாடில்லை. ஆனாலும் அதை விட்டால் வேறு வழியில்லை என்ற நிலையிலேயே இந்தச் சந்திப்பு நடந்துள்ளது.

இதற்கான தூண்டலைச் செய்தவர் வட மாகாணசபையின் முன்னாள் அமைச்சர்களில் ஒருவர். அதைச் சிவில் பிரமுகர்களால் தவிர்க்க முடியாமல் போய் விட்டது.

சுமந்திரனைச் சமாதானப்படுத்தி (Convince பண்ணி)னால் தான் தமிழரசுக் கட்சி, பொதுவேட்பாளர் என்ற நிலைப்பாட்டுக்கு ஆதரவளிக்கும். தமிழரசுக் கட்சி ஆதரவளித்தால்தான், ஏனைய கட்சிகளெல்லாம் இதை ஆதரிக்கும். இதைத் தவிர்த்து விக்கினேஸ்வரனோ சுரேஸ் பிரேமச்சந்திரனோ சிவில் பிரதிநிதிகளோ இந்த விடயத்தில் தனியே எதையும் செய்ய முடியாது என்றாகி விட்டது. ஆகவே நீங்கள் தலையைப் பிடிக்க வேணும். தலையைப் பிடித்தால் தான் வால்களெல்லாம் கட்டுப்பாட்டுக்கு வரும் என்று சொல்லியிருக்கிறார் அந்த முன்னாள் அமைச்சர்.

எனவே உலகமெல்லாம் சுற்றி வருவதை விடவும் சுமந்திரனைப் பிடித்தால் போதும் என்ற கட்டத்தில் இந்தச் சந்திப்பு நடந்தது.

சந்திப்பின் போது பொதுவேட்பாளரை ஏன் நிறுத்த வேண்டும்? அதற்கான அவசரமென்ன? என்றொரு சாதாரண கேள்வியைத் தூக்கிப் போட்டிருக்கிறார் சுமந்திரன். சென்றவர்கள் கொஞ்சம் ஆடிப் போய் விட்டார்கள். இருந்

தெரியப்படுத்த முடியும். இது இன்றைய சூழலில் அவசியமானது....'' என்று சொன்னார்கள்.

இதற்குப் பதிலளித்த சுமந்திரன், தேர்தல் இன்னும் அறிவிக்கப்படவில்லை. யார் யாரெல்லாம் போட்டியிடுவார்கள் என்று கூட இன்னும் உறுதியாகவில்லை. போட்டியிடும் தரப்பிலிருந்து தேர்தல் விஞ்ஞாபனங்களும் வரவில்லை. அதற்குள் எதற்கு இந்த அவசரமெல்லாம்? இப்போதுள்ள சூழலில் எல்லோரையும் நாம் சமநிலையில் வைத்தே பார்க்கிறோம். இறுதி தீர்மானத்தை எடுப்பதற்கு முன்பு இதைப் பற்றி மக்களுடன் கலந்தாலோசிப்பதற்குத் திட்டமிட்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்.

சிவில் சமூகப் பிரதிநிதிகளால் சுமந்திரனை எந்த நிலையிலும் வழிக்குக் கொண்டுவர முடியவில்லை. இறுதியில் இதைப் பற்றி நாம் தொடர்ந்து விவாதிப்போம். அதற்குரிய ஏற்பாட்டைச் செய்கிறேன் என்று சுமந்திரனே தொடர்ந்து கொண்டிருந்த தடுமாற்றத்துக்கு ஒரு முடிவைச் சொல்லி அனுப்பி வைத்தார்.

சுமந்திரன் சொன்னதைப் போல நாளை மறுதினம் ஜீன் 09 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் தமிழ்ப் பொதுவேட்பாளர் பற்றிய பொதுவிவாதம் நடைபெறவுள்ளது. இந்த அறிவிப்பையும் சுமந்திரனே விடுத்துள்ளார். இதற்கிடையில் தமக்குச் சாதகமான வகையில் சிவில் அணியினர் வணிகர் கழகம், கூட்டுறவுச் சபை என ஓடியோடி பல்வேறு தரப்பினர்களையும் சந்திந்து ஆதரவு கோரிவருகின்றனர். இப்படியான உசாரோடு மக்களுக்கான வேலையைக் களத்திலிறங்கிச் செய்திருந்தால், தமிழ்ச் சமூகம் இன்று கொஞ்சமாவது முன்னேற்றத்தைக் கண்டிருக்கும்.

பல பிரச்சினைகளுக்குத் தீர்வையும்

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியைத் தவிர்த்தால், சுமந்திரன்தான் எதையும் தீர்மானிப்பவராக இருக்கிறார் என. சுமந்திரனை மீறித் தமிழரசுக் கட்சியினாலும் எந்த முடிவுக்கும் செல்ல முடியாது. அதனுடைய புதிய தலைவர் தெரிவு உட்பட கட்சியின் அத்தனை நடவடிக்கைகளும் இன்று சுமந்திரனில் தான் தங்கியுள்ளன. இது சற்று மிகைப்படுத்தப்பட்ட கூற்று எனச் சுமந்திரனே இதனை மறுக்கலாம். ஆனால், உண்மை என்னவென்று எல்லோருக்கும் தெரியும். என்பதால் தான் சுமந்திரனிடம் பொது வேட்பாளருக்கான அணி பகிரங்கமாகச்சரணடைந்திருக்கிறது. ஆனால் சுமந்திரனோ பொதுவேட்பாளர் என்ற நிலைப்பாட்டுக்கு எதிரானவர். அதை அவர் பகிரங்கமாகவே சொல்லியும் வருகிறார்.

இதனால் உண்டாகக் கூடிய அரசியல் சாதக பாதக அம்சங்களையும் சுமந்திரன் அறிவார். இருந்தாலும் ஜனநாயக அடிப்படையில் இதைப் பற்றிய விவாதமொன்றுக்கு அவர் முன் வந்திருப்பது பாராட்டுக்குரியது. இதுதான் சுமந்திரனின் இயல்பும் சிறப்புமாகும். பொதுச் சூழல் என்னவாக உள்ளது? பொது அபிப்பிராயம் எப்படி இருக்கிறது என்றெல்லாம் பார்த்து, அதற்கேற்ற மாதிரிக் கதைக்காமல் (விழுந்த பக்கத்துக்குக் குறியைச் சுடாமல்) எது சரியாக இருக்கிறதோ, தான் எதைச் சரியென நம்புகிறாரோ அதைத் துணிந்துரைப்பதே சுமந்திரனின் வழமை.

இதனால் தான் அவர் யாழ்ப்பாணத்தில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பொன்றில், யாரும் என்னைத் துரோகி என்று சொல்வார்கள் என்பதற்காக என்னுடைய கருத்தைச் சொல்லாமல் விட மாட்டேன். என்னுடைய நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள மாட்டேன் என்று சொன்னதுமாகும்.

அரசியலில் எப்போதும் சரியான பார்வையும் அதை முன்னெடுக்கக் கூடிய துணிவும் அவசியமானவை. இவையிரண்டும் இல்லையென்றால், எத்தகைய மகத்தான கருத்தும் (கொள்கையும்) பயனற்றதாகி — பெறுமதியற்றதாகி — விடும். யாரும் மிகச் சிறந்த அறிவாளிகளாக இருக்கலாம்.

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



ஆனால், அந்த அறிவைச் செயலாக்கக் கூடிய ஆற்றலும் ஆளுமையும் வேண்டும். கூடவே சமகாலத்தன்மை மிக அவசியமானது.

சுமந்திரன் சம காலத்தன்மைக்கு நெருக்கமானவர். அவர் முன்னெடுக்க முயற்சிப்பது, சமகால அரசியல் (Contemporary Politics). இதற்குக் காரணம், அவர் ஒரு நவீனத்துவவாதி (Modernist) யாக இருப்பதாகும். அவருடைய அரசியற் தன்மை, ஏறக்குறைய நவீனத்தன்மைக்குரியது (Modern politics). எவரோடும் உரையாடக் கூடியது. இது முக்கியமான ஒன்று.

நம்மிடம் எவ்வளவு சரிகள், நியாயங்கள் இருக்கிறது என்பது முக்கியமல்ல, எதிரே உள்ளவர்கள் அதை எப்படிப் பார்க்கிறார்கள்? எந்தளவுக்கு ஏற்றுக் கொள்கிறார்கள்? என்பதே முக்கியமானது. ஒரு கவிதையில் உள்ளதைப் போல, என்னுடைய சொற்களுக்கு எதிராளியின் மனதில் இன்னோர் அர்த்தம் உள்ளது என்பதை ஆழ்ந்து புரிந்து கொள்வது அவசியமானது. இந்தப் புரிதலின்மையினால் தான் தமிழ்ச் சமூகத்தின் மாபெரும் தியாகங்களும் பேரிழப்புகளும் பயனற்றவை என்ற நிலைக்கு வந்தது.


சமகாலத் தன்மையைக் கொண்ட எவரும் நவீனத்துவவாதிகளாகவே இருப்பர். அதைப் போல நவீனத்துவவாதிகள் சமகாலத் தன்மையோடு, எதிர்காலத்தைக் குறித்துத் தீர்க்கமாகச் சிந்திப்போராகவும் இருப்பர்.

இதை நாம் அரசியலில் மட்டுமல்ல, நடை, உடை, பாவனை உள்ளிட்ட அனைத்திலும் அவதானிக்க முடியும். இவர்களோடு சமூகத்துக்கு எப்போதும் ஒரு ஒவ்வாமை — முரண் — இருக்கும். சமநிலையில் சமூகத்தோடும் இவர்களுக்கு மறைமுகமாக ஒவ்வாமை — முரண் -காணப்படும். ஆனால், இவர்களுக்குப் பின்னால்தான் சமூகம் தன்னை மெல்ல மெல்ல ஒழுங்கமைத்துச் செல்வது. மாற்றம் இவ்வாறானவர்களாலேயே நிகழ்வது. இதனால் இவர்களே வரலாற்றில் முன்னோடிகளாகக் கருதப்படுகிறார்கள். முன்னோடிகளின் காலில் முள் குத்தியே தீரும். அவர்கள் நடப்பது புதிய பாதை அல்லவா!

இதற்கு மாறாக ஒருசாரார் உள்ளனர். தங்களுடைய கைகளில் அப்பிள் (Apple Mobile phone) கைபேசியை வைத்திருப்பார்கள். நவநாகரீகமாக உடுத்திக் கொள்வார்கள். பிள்ளைகளைப் புதிய — நவீன துறைகளில் படிப்பிப்பார்கள். நவீனமாக வீட்டைக் கட்டுவார்கள், புதிய Model வாகனங்களை, புத்தம் புதிய பொருட்களையெல்லாம் வாங்கிக் கொள்வார்கள். ஆனால், அவர்களுடைய சிந்தனையும் நடைமுறையும் கடந்த காலத்துள் இறந்த காலத்துள் புதையுண்டிருக்கும். அவர்கள் அடிப்படையில் இறந்த கால மனிதர்களே (Dead people).

ஆனால் சுமந்திரனுக்கு எப்போதும் இந்தத் தருணம் (This is the occasion) முக்கியமானது. அதையும் விட முக்கியமானது எதிர் காலமாகும். அதைப் பற்றியே அவர் சிந்திக்கிறார். அவருடைய நேர்காணல்கள், உரைகள், (22ம் பக்கம் பார்க்க)

# மோடியின் கன்னியாகுமரி தியானம் அரசியலா? ஆன்மீகமா?



இந்த உலகத்தில் புனிதமான ஆன்மபலம் பொருந்திய தியானத்தை மீண்டும் மீண்டும் அரசியலாக்கிய ஒரே அரசியல் தலைவர் இந்தியாவின் பிரதமர் மோடியாக மட்டும் தான் இருக்க முடியும்.

கடந்த மே மாதம் 30ம் திகதி மாலையில் இருந்து யூன் 1ம் திகதி மாலை வரை 45 மணி நேரம் கன்னியாகுமரியில் உள்ள சுவாமி விவேகானந்தர் நினைவிடத்தில் தியான அரசியல் செய்து. எந்த சந்தேகமும் இன்றி நிரூபித்துக் காட்டியிருக்கின்றார் சர்வதேசத்துக்கு முன்.

தன்னை ஒரு அவதார புருஷராகக் காட்டிக் கொள்ளும் இந்த நூற்றாண்டின் நவீன ஹிட்லர் மோடி தான் என்பதை தென்னாசியாவின் ஜனநாயக அரசியல் ஆய்வாளர்கள் மிகக் கடுமையாக விமர்ச்சிக்கின்றார்கள்.

இனவாதத்தையும், மதவாதத்தையும் கடுமையாக தன் இதயத்திலிருந்து இருந்து கக்குகின்ற ஒருவன் தெய்வீகம் நிறைந்த அவதார புருஷர் நான் தான் என்ற தன் சுய சிந்தனையின் வட்டத்துக்குள்ளே ஒரு போதும் பிரவேசிக்க முடியாத போது. இந்திய மக்களிடம் எப்படி நான்தான் உங்களின் அவதார புருஷர் என பறை சாற்றிக் கொள்ள முடியுமென இந்திய ஆன்மீக பீடங்கள் பிரதமர் மோடியை நோக்கி கேள்விக் கணைகளை தொடுக்கின்றன.

சுவாமி விவேகானந்தரையும், பிரதமர் மோடியையும் ஒரு கற்பனையில் ஒப்பிட்டால் கூட மலைக்கும் மடுவுக்கும் இடையிலான வித்தியாசத்தை ஒரு சிறு குழந்தை கூட கண்டு பிடித்து விடும். இது கூட தெரியாதவர்களா..? இந்திய மக்கள். எப்படி எல்லாம் பா.ஜ.காவின் தலைமை இந்திய மக்களின் காதுகளில் பூ சுற்றப் பார்க்கின்றது என்பதை உணர முடிகின்றது. பிரமத்தை உணர்ந்தவன் பிரமமாகின்றான் என போதிக்கின்றது சனாதன தர்மம். அதாவது அவனே கடவுளாக தன்னை உணர்ந்து அனுபவமாக்கிக் கொள்கின்றான். அதுவே தியானத்தின் உயர்ந்த நோக்கமாகும். அந்த நோக்கத்திற்காக உழைக்கும் ஒருவனுக்கு தியான சமயத்தில் எவ்வித படைபலமோ பாதுகாப்போ தேவையில்லை அப்படிப்பட்ட ஒருவனே அவதார புருஷன் என்ற தகுதியைப் பெறுகின்றான்.

ட்ரோன்கள் தலைக்கு மேல் சுற்ற மெய்ப்பாதுகாவலர் புடை சூழ உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு எந்த நேரமும் என்ன நடக்குமோ என்ற பீதியுடன் கன்னியாக்குமரியில் உள்ள சுவாமி விவேகானந்தர் நினைவிடத்தில் மோடி செய்த தியானம் அவர் இந்தியாவின் அவதார புருஷர் அல்ல என்பதை அவர் செயலே எடுத்துக் காட்டியிருக்கின்றது.

அரசியலை ஆன்மீகம் சார்ந்த எண்ணமாகவும், வார்த்தையாகவும், செயலாகவும் மாற்றலாமே தவிர ஒரு போதும் ஆன்மீகத்தை அரசியலாக்க முடியாது. அதனால்தான் பெரிய புராணத்தில் 'கோன் முறை அரசு செய்க குறைவில்லா துயிர்கள் வாழ்க' என பாடுகின்றார் சேக்கிழார் பெருமான். இதிலிருந்து நாம் அரசியலையும் ஆன்மீகத்தையும் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியும்.

பிரதமர் மோடி தன் தியான அரசியலுக்கு தேர்ந்தெடுத்த இடம் தமிழ் நாட்டின் கரைக்கோடியான கன்னியாகுமரியாகும். அங்கிருந்து இமயம் வரை தானே இந்தியாவின் இரட்சகர் என்பதை மோடி சொல்லாமல் சொல்லியிருக்கின்றார். ஆனால் பெரும் துரதிஷ்ரம் என்னவென்றால் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் முடிவின்படி தமிழ் நாட்டில் தி.மு.க, அ.தி.மு.க, நாம் தமிழர் ஆகிய மூன்று கட்சிகளும் இருக்கும் வரை பா.ஜ.கவின் தாமரை தமிழ் நாட்டில் ஒருபோதும் மலராது.

மண் குதிரையான பா.ஜ.கவின் தமிழ் நாட்டு மாநிலத் தலைவர் அண்ணாமலையை நம்பி மோடி போட்ட இராஜ தந்திர திட்டங்கள் அனைத்தும் தவிடு போடியாகியதுதான் மிச்சம். அகண்ட பாரதத்தில் ஒரு போதும் தமிழ் நாடு அடங்காது. அது எப்போதும் தமிழ் மொழியோடும் தமிழனோடும் தனித்தே நிற்கும் தனி நாடு அதுவே கடந்த கால வரலாற்றுச் சான்றாகும்.

நடந்து முடிந்த தேர்தலின் படி மோடியின் வாக்கு வங்கியின் அலை மெதுவாக குறைவடைந்து செல்வதைக் காணலாம். இந்து இனவாத காவிகளின் உண்மை முகம் ஓரளவு வெளிறத் தொடங்கியுள்ளது என்பதையும் காந்தி நாடு ஒருபோதும் மோடியின் நாடு ஆகிவிடாது என்பதையும் சர்வதேசம் வெகு விரைவில் அறிந்து கொள்ளும் காலம் வந்து விட்டது.

**சாம்.ரமேஷ்குமார் (கனடா)**

## மாநில அந்தஸ்தை எட்டும் நாம் தமிழர் கட்சி!

(18ம் பக்கத் தொடர்ச்சி) கட்சியாக இருந்தாலும் திமுகவால்கூட மத்திய அரசுக்குப் பெரிய அளவில் அழுத்தம் கொடுக்க முடியவில்லை. அப்படி இருக்கையில், சீமான் மேடைகளில் பேசுவதையெல்லாம் நாம் தமிழர் கட்சியால் செயல்படுத்தி விட முடியுமா?' என்றும் கேள்வி எழுப்பினார்.

கரும்பு விவசாயிக்குப் பதிலாக புதிதாகப் பெற்ற மைக் சின்னத்தை மக்களிடையே சென்று சேர்ப்பதில் சிரமம் ஏற்பட்டதா என்ற கேள்விக்கு, 'எங்கள் கட்சியில் சேர்பவர்கள் நல்ல அரசியல் புரிதலுடன், விழிப்புணர்வுடன் இருக்கின்றனர். அவர்கள் நாம் தமிழர் கட்சி எங்கே என்று தான் தேடுகின்றனர். இதுபோன்ற அரசியல் விழிப்புணர்வுள்ள தொண்டர்களுக்கு சின்னத்தைக் கொண்டு சேர்ப்பதில் எங்களுக்குப் பெரிய சிரமம் இருக்கவில்லை,' என்று கூறினார் இடும்பாவனம் கார்த்தி. அப்படியென்றால், நாம் தமிழர் கட்சியை தேர்தல் ஆணையம் அங்கீகரித்தால் உங்கள் கட்சியின் சின்னமாக எதைத் தேர்வு செய்வீர்கள் என்ற கேள்விக்கு, 'வேளாண் அடிப்படையிலான தற்சார்பு பொருளாதாரத்தை வலியுறுத்தும் நாம் தமிழர் கட்சியின் கொள்கைக்கு கரும்பு விவசாயி சின்னமே பொருத்தமானது என்பதால் அதையே தேர்வு செய்வோம்' என்று பதிலளித்தார்.

பத்திரிகையாளர் சிகாமணி. இதுவொரு இடைக்கால வளர்ச்சி தான். வைகோ, விஜயகாந்த் போல மாற்று தேடும் மக்களுக்கும், பேச்சுகளால் கவரப்படும் இளைஞர்களுக்கும் வடிகாலாக நாம் தமிழர் கட்சி இருக்கும் என்றார்.– நன்றி:–பிபிசி





வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  GIve you solutions without bankruptcy.

Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation



Over 20 Years Experience in the field of Insolvency

CRC CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca

# போதைப் பொருளிற்கு அடிமையானவர் துப்பாக்கியை கொள்வனவு செய்த விவகாரத்தில் ஜோ பைடனின் மகன் குற்றவாளி! நீதிமன்றத் தீர்ப்பை ஏற்கின்றேன் தந்தை ஜோ பைடன்!

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தனது மகனிற்கு எதிராக நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மதிப்பேன் என தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோபைடனின் மகன் ஹன்டர் பைடன் போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் துப்பாக்கியை பயன்படுத்துவது தொடர்பான சட்டங்களை மீறினார் அமெரிக்க நீதிபதியொருவர் தீர்ப்பளித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக பதவி வகிக்கும் ஒருவரின் குடும்ப உறுப்பினர் குற்றவாளி என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளமை இதுவே முதல் தடவை.



துப்பாக்கியை கொள்வனவு செய்த வேளை தான் போதைப்பொருள் பாவனையாளர் இல்லை என ஹன்டர் பொய் சொன்னமை தொடர்பில் இரண்டு குற்றச்சாட்டுகளும் போதைப் பொருளிற்கு அடிமையான வேளை துப்பாக்கிகளை வைத்திருந்த ஒரு குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 2018ம் ஆண்டு கைத்துப்பாக்கியை கொள்வனவு செய்த வேளை அரசாங்க ஆவணத்தில் தான் போதைப்பொருளை பயன்படுத்தவில்லை அதற்கு அடிமையாகவில்லை என ஹன்டர் பைடன் தெரிவித்திருந்தார் ஆனால் அவ் வேளை கொக்கெய்ன் பாவனையால் பாதிக்கப்பட்டிருந்தார் என்பது பிரதான குற்றச் சாட்டாக காணப்பட்டது.

அமெரிக்க அரசாங்கத்தின் ஏடிஎவ் ஆவணத்தில் பொய்யான தகவல்களை வழங்குவதும் போதைப் பொருளை பயன்படுத்துபவர் துப்பாக்கி வைத்திருப்பதும் அமெரிக்காவில் கடும் குற்றம் இதற்கு 25 வருட சிறைத் தண்டனை விதிக்கப்படலாம்.

இந்நிலையில் நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியான பின்னர் டெலாவெயர் வில் மிங்டனிற்கு சென்ற பைடன் குற்றவாளி என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள ஹன்டர் பைடனை கட்டித் தழுவியுள்ளார். நான் ஜனாதிபதி நான் தந்தையும் கூட நானும் ஜில்லும் மகனை நேசிக்கின்றோம் இன்று அவரின் நிலையை பார்த்து பெருமிதம் கொள்கின்றோம் என தெரிவித்துள்ள பைடன் நீதிமன்றத்தின் தீர்ப்பை மதிப்போம் ஹன்டர் மேல்முறையீடு செய்வது குறித்து ஆராய்ந்துவரும் இவ் வேளை நீதிமன்ற செயற்பாடுகளை மதிக்கின்றோம் என குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க அரசாங்கத்தின் ஏடிஎவ் ஆவணத்தில் பொய்யான தகவல்களை வழங்குவதும் போதைப் பொருளை பயன்படுத்துபவர் துப்பாக்கி வைத்திருப்பதும் அமெரிக்காவில் கடும் குற்றம் இதற்கு 25 வருட சிறைத் தண்டனை விதிக்கப்படலாம். தனது மகனிற்கு பொது மன்னிப்பு வழங்கப் போவதில்லை என பைடன் முன்னர் தெரிவித்திருந்தார்.

# தமிழ்நாட்டில் தனித்து இயங்க விரும்புகின்றதா காங்கிரஸ்? கூட்டணிக்குள் சலசலப்பை ஏற்படுத்திய செல்வப்பெருந்தகை





தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் செல்வப் பெருந்தகை சமீபத்தில் தமிழகத்தில் விரைவில் காமராஜர் ஆட்சி அமைப்போம் என்று பலரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தினார். ஏனென்றால் காங்கிரஸ் கூட்டணியில் இருக்கும் திமுக தான் தமிழகத்தை ஆட்சி செய்து வரும் நிலையில் செல்வபெருந்தைகையின் கருத்து காங்கிரஸ் கட்சியினரையே ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

ஆனால், காங்கிரஸ் கட்சியின் மூத்த நிர்வாகியும், ஈரோடு சட்டமன்ற உறுப்பினருமான ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், மீண்டும் காமராஜர் ஆட்சி வேண்டும் என்கின்றனர். பாசிசத்திற்கு எதிராக சமூக நீதியைச் சமத்துவத்தை பிரகனப்படுத்தி எங்கெல்லாம் ஆட்சி நடக்கிறதோ அது எல்லாமே காமராஜர் ஆட்சி தான். அந்த வகையில் நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னெடுத்துள்ள திராவிட மாடல் ஆட்சியைக் காமராஜர் ஆட்சி எனச் சொல்வதில் எனக்குச் சிறிதும் தயக்கம் கிடையாது என்றார். செல்வ பெருந்தையில் கருத்திற்கு இது பதிலடியாகவே பார்க்கப்பட்டது.

இந்த நிலையில் சென்னை சத்தியமூர்த்தி பவனில் காங்கிரஸ் கட்சியின் பொதுக்குழுக் கூட்டம் நடை பெற்றது. இதில் காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள், எம்.பிக்கள், கட்சியின் மேலிடப் பொறுப்பாளர் என பல முக்கிய நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர். இந்தக் கூட்டத்தில் கட்சியினர் மத்தியில் பேசிய தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப் பெருந்தகை, நாம் பிறரைச் சார்ந்திருக்கப் போகிறோமா? அல்லது சுயமாக இருக்கப் போகிறோமா? எவ்வளவு காலம் பிறரை சார்ந்திருக்க முடியும். காங்கிரஸ் பேரியக்கத்திற்கு என்று ஒரு வரலாறு இருக்கிறது. நமக்குத்தான் அனைவரையும் ஆதரிக்கின்ற, குரல்கொடுக்கின்ற சித்தாந்தம் இருக்கிறது. வேறு எந்தக் கட்சிக்கும் கிடையாது. பாஜகவில் இதுவரை ஏன் ஒரு இஸ்லாமியர்களோ, கிறிஸ்துவர்களோ அமைச்சராக்க முடியவில்லை? இந்தத் தேர்தலில் காங்கிரஸ் 99 வேட்பாளர்களை வென்றிருந்தார்கள். மேலும் சுயட்ஜயாக போட்டியிட்ட இரண்டு பேர் காங்கிரஸ் கட்சிக்கு வந்திருக்கிறார்கள் தற்போது நமது கணக்கு 101 ஆக மாறியுள்ளது.

தற்போது மத்திய அமைச்சராக இருக்கக்கூடியவர்களே காங்கிரஸ் கட்சிக்கு வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. நம்மை விட்டு பிரிந்து சென்றவர்கள் எல்லாம் ராகுலில் கரங்களை வழிப்படுத்தக் காங்கிரஸ் கட்சிக்கு வாக்களித்து தங்களை அர்பணித்துக் கொண்டிருக்கிறார்கள். வரலாறு மாறுகிறது.

அதனால் தொண்டர்களுக்கும் தலைவர்களுக்கும் நாம் சொல்லுகின்ற ஒரு செய்தி, எந்த திசையை நோக்கிச் சொல்லப்போகிறோம்? சார்ந்து இருக்கப் போகிறோமா? தோழமை என்பது வேறு, தோழமைக்கு உண்மையாக இருப்பதில் நமக்கு நிகரானவர்கள் வேறு யாரும் கிடையாது. உண்மை என்றால் காங்கிரஸ் உண்மையாக இருக்கும் தோழமை என்றால் உண்மையான தோழமையாகக் காங்கிரஸ் இருக்கும். ஆனால் எவ்வளவு காலம் சார்ந்திருக்கப் போகிறோம்? என்ற கேள்வி தற்போது எழுகிறது. அதற்கான விடை உங்களிடம் எதிர்பார்க்கிறேன் என்றார்.

இதனைத் தொடர்ந்து பேசிய ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன், இன்றைக்குத் தமிழகத்தில் 40க்கு 40 தொகுதி வெற்றி பெற்றிருக்கிறோம் என்று சொன்னால் அதற்கு, திமுகவும், முதல்வர் ஸ்டாலின்தான் காரணம் என்பதை நீங்கள் மறந்து விடக் கூடாது. தனித்து நின்றோம். கன்னியாகுமரி, சிவகங்கை தொகுதிகளில் மட்டும் ஒரு லட்சம் வாக்குகள் வாங்கி தோல்வி அடைந்தோம் மற்ற அனைத்து தொகுதிகளிலும் டெப்பாசிட்டை இழந்தோம். யாருக்கு இங்கே ஆசையில்லை. நாம் வர வேண்டும் என்பதில் எனக்கு ஆசையில்லாமலா இருக்கிறது. நாம் வரவேண்டும் என்ற ஆசை ஒரு பக்கம் இருந்தாலும் கூட, நம் எதிரியை வீழ்த்த வேண்டும் என்பது தான் தற்போது முக்கியம்.

எனவே அதற்கான பாதையை தேர்ந்தெடுத்துப் போக வேண்டுமே தவிர, நான் தான் வெல்லுவேன், நான் தான் தனியாக நிற்பேன், தனியாக தோற்பேன் என்றால் அது உங்களில் இஷ்டம். நான் யாருக்கும் பகைவன் அல்ல. உங்களுக்கு இருக்கிற அதே காங்கிரஸ் உணர்ச்சி எனக்குள்ளும் உண்டு.


தமிழகத்தில் காங்கிரஸை காலூன்ற வைத்த பெரியாரின் குடும்பத்திலிருந்து வந்திருக்கின்றேன். காமராஜரின் ஆட்சி அமைக்க வேண்டும் என்று சொல்வதில் எனக்கும் உடன்பாடு உள்ளது. ஆனால், அதற்குக் கொஞ்சம் தந்திரம் வேண்டாமா? முதலில் எதிரியை ஒழிக்காமல் எப்படி அந்த இடத்தை பிடிப்பீர்கள் என்று யோசியுங்கள். நாற்காலி காலியானதானே நீங்கள் அதில் போய் உட்கார முடியும்.

இந்த கட்சிக்காகத் தியாகம் செய்த ராஜீவ்காந்தி, இந்திராகாந்தியை நினைத்து பாருங்கள் தற்போது தியாகம் செய்து கொண்டிருக்கும் சோனியா காந்தியை நினைத்துப் பார்க்க வேண்டும். அவர்கள் தியாக செய்வார்கள் நாம் பதிவு பெற வேண்டும் என்று நினைத்தால் அது எவ்வளவு பெரிய அயோக்கியத்தனம் என்று எண்ணிப் பாருங்கள். இந்த மேடையில் இருக்கும் அனைவரும் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்றால் அதற்கு திமுக தான் காரணம். ஆசை இருக்க வேண்டும் இல்லை என்று சொல்லவில்லை. அது பேராசையாகி கடைசியில் ஒன்றுமில்லாமல் போய் விடக்கூடாது என்று தெரிவித்தார்.




தமிழக காங்கிரஸ் தலைவர் ஒன்று சொல்ல, அதற்கு நேர் மாறாகக் காங்கிரஸ் மூத்த நிர்வாகி ஒன்று சொல்வது இருவருக்கும் இடையே வார்த்தை போராக மாறியிருக்கிறது. இது காங்கிரஸ் கட்சி இடையே மட்டுமல்ல திமுக - காங்கிரஸ் கூட்டணிகளிடையேயும் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! சாதகமான பலன்கள் கிடைக்கும். பொருளாதார முன்னேற்றம், பணவரவில் திருப்தி இருக்கும். எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். உடல் ஆரோக்கியம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். கணவன் மனைவிக்கிடையே ஒற்றுமை உண்டாகும். பிள்ளைகள் மூலம் பெருமை ஏற்படும். உறவினர்கள் வருகையும் அவர்களால் நன்மையும் உண்டாகும்.




ரிஸபராசி அன்பர்களே! வீண் செலவு ஏற்பட்டாலும் அதை சமாளிக்கும் விதத்தில் வரவும் இருக்கும். கனவுகளால் தொல்லை ஏற்படலாம். உஷ்ண சம்பந்தமான நோய் உண்டாகலாம். குடும்பத்தில் தேவையற்ற பிரச்னைகள் உருவாகலாம். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டாலும் சரியாகிவிடும். வீடு, வாகனம் தொடர்பான செலவுகள் உண்டாகலாம். பிள்ளைகளுக்காக கூடுதல் செலவு செய்ய வேண்டி இருக்கும்.





மிதுனராசி அன்பர்களே! சாமர்த்தியம் அதிகரிக்கும். மனவருத்தம் நீங்கும். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. தனாதிபதி சூரியன் சஞ்சாரத்தால் பணதேவை ஏற்பட்டாலும் அதை திறமையாக சமாளித்து விடுவீர்கள். குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை காணப்பட்டாலும், குடும்ப உறுப்பினர்களுக்காக மருத்துவ செலவு செய்ய வேண்டி இருக்கலாம். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது.





கடகராசி அன்பர்களே! திட்டமிட்டு எதையும் செய்ய வேண்டியது அவசியம். வீண்பழிவர வாய்ப்பு உள்ளதால் எதிலும் கவனம் தேவை. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன், மனைவிக்கிடையே வாக்குவாதம், பிள்ளைகளின் செயல்களால் மனவருத்தம் போன்றவை ஏற்படலாம். வீட்டில் உள்ள பொருட்களை கவனமாக பாதுகாப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் வாக்குவாதம் உண்டாகலாம்.





சிம்மராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தாமதம் உண்டாகும். சகோதரர் வழியில் நன்மை உண்டாகும். குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் நீங்கும். கணவன் மனைவிக்கிடையில் இருந்த சங்கடங்கள் தீரும். பிள்ளைகள் கல்வி பற்றிய கவலை நீங்கும். வீட்டிற்கு தேவையான பொருட்கள் வாங்குவீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும்.




கன்னிராசி அன்பர்களே! எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். பூமி, வீடு தொடர்பான பிரச்னைகள் நல்ல முடிவுக்கு வரும். சகோதரர்களுடன் இருந்த மனவருத்தம் நீங்கும். எதிர்பாராத செலவு உண்டாகலாம். குடும்பத்தினரின் பேச்சுக்கு எதிர்த்து பேசுவதை தவிர்ப்பது நன்மை தரும். கணவன், மனைவிக்கிடையே வீண் வாக்குவாதங்கள் ஏற்படலாம். பிள்ளைகளிடம் அன்பாக பழகுவது நல்லது.





துலாம்ராசி அன்பர்களே! மன சஞ்சலம் நீங்கும். சிறிய விஷயத்துக்கு கூட கோபம் வரலாம். கட்டுப்படுத்துவது நன்மை தரும். குடும்பத்தினரின் செயல்பாடுகள் மகிழ்ச்சியை கொடுக்கும். கணவன், மனைவிக்கிடையே மனம் விட்டு பேசி எடுக்கும் முடிவுகள் நல்ல பலன் தரும். பிள்ளைகளை அனுசரித்து செல்வதும், அவர்கள் போக்கில் விட்டு பிடிப்பதும் நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான வீண் அலைச்சல் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கைக்கு வருவதில் தாமதம் ஏற்படலாம்.





விருச்சிகராசி அன்பர்களே! சிக்கல்கள் தீரும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். பொருளாதார நிலை உயரும். குடும்பத்தில் உங்களுக்கு எதிராக பிரச்சனையை உண்டாக்கியவர்கள் தானாகவே அடங்கி விடுவர். வீட்டில் சுப காரியம் நடக்கும். திருமண காரியங்களில் சாதகமான போக்கு காணப்படும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். மதிப்பு கூடும். தொழில் வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் தீரும். கடன் கட்டுக்குள் இருக்கும்.








தனுசுராசி அன்பர்களே! வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நன்மை தரும். வேலை பளு காரணமாக நேரம் தவறி உணவு உண்ண வேண்டி இருக்கும். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு வரலாம். விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. சிலர் குடும்பத்தை விட்டு பிரிந்து வெளியில் தங்க நேரலாம். தொழில் வியாபாரத்தில் பார்ட்னர்களை அனுசரித்து செல்வது நல்லது. புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பர்.




மகரராசி அன்பர்களே! தேவையற்ற மனக்கவலை அகலும். வழக்கு விவகாரங்களில் இருந்த தாமதமான போக்கு நீங்கும். நிர்பந்தமாக வெளியூர் பயணம் செல்ல நேரலாம். குடும்பத்தில் இருப்பவர்களால் வீண் பழி ஏற்பட வாய்ப்பு உண்டு. எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே மனஸ்தாபங்கள் வரலாம். பிள்ளைகளின் செயல்பாடுகளில் கவனம் தேவை. ஆயுதங்களை பயன்படுத்தும் போது கவனம் தேவை.




கும்பராசி அன்பர்களே! பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சனைகளில் சாதகமான நிலை காணப்படும். தான தர்மம் செய்வும், ஆன்மிக பணிகளில் ஈடுபடவும் தோன்றும். நீண்ட தூர பயணத்தின் போது கவனம் தேவை. குடும்பத்தில் எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே திடீர மன வருத்தம் ஏற்படலாம். பிள்ளைகளின் செயல் ாடுகள் மனதுக்கு திருப்தி அளிக்கும்.




மீனராசி அன்பர்களே! அனுகூலமாக அனைத்து காரியங்களும் நடக்கும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் செல்ல நேரலாம். உடல் ஆரோக்கியம் உண்டாகும். குடும்பத்தினரை அனுசரித்து செல்வதன் மூலம் எல்லா பிரச்னைகளும் சரியாகும். கணவன் மனைவிக்கிடையே இருந்த மனஸ்தாபம் நீங்கும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக முக்கிய பணிகளை மேற்கொள்வீர்கள். உறவினர்களிடம் வீண் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# தமிழ்த்தேசிய வட்டகையில் நிராகரிக்க..

(19ம் பக்கத் தொடர்ச்சி) அணுகுமுறைகள், நவடிக்கைகளில் இதை அவதானிக்க முடியும். ஒப்பீட்டளவில் அவர் கூடிய பட்சமான ஜனநாயகவாதி. இதனால் தான் அவர் முஸ்லிம்களோடும் நெருக்கமாக அவர்கள் நெருங்கக் கூடிய ஒருவராக இருக்கிறார். தமிழ்த் தேசியப் பரப்பில் சுமந்திரன் அளவுக்கு முஸ்லிம்களோடு நெருக்கமான தலைவர்கள் குறைவு. இன்னொருவர் திரு. சம்மந்தன். இதைப் போல சிங்களப் பரப்பிலும் மலையக மக்களோடும் சுமந்திரனுக்கு ஊடாட்ட உறவுண்டு.

நாடாவிய பிரச்சினைகளில் அவர் காட்டுகின்ற ஆர்வமும் அவற்றில் சுமந்திரன் நிகழ்த்துகின்ற இடையீடுகள், தலையீடுகளும் அவருக்கான பரந்த அறிமுகத்தையும் முக்கியத்துவத்தையும் அதிகரித்திருக்கின்றன. (இருந்தாலும் பல சந்தர்ப்பங்களில் சுமந்திரனும் சம்மந்தனும் தனிப்பட நடந்து கொள்ளும் விதம் ஒரு அரசியற் தலைவர்களுக்குரியதாக இருப்பதில்லை. குறிப்பாக பலரையும் இணைத்துப் பயணிக்கும் பொறுமையும் நிதானமும் இருவரிடத்திலும் குறைந்தே உள்ளது. இது பெருங்குறைபாடாகும்).

சுமந்திரனுடைய தமிழரசுக் கட்சியோ கடந்தகாலம் சமகாலம் என இரண்டிலும் அல்லாடிக் கொண்டிருப்பது. இந்த இழுபறியும் மோதலுமே சிறிதரன் — சுமந்திரன் அணி மோதல் கூட. சிறிதரன் கடந்த காலத்தின் அடைக் கோழியாகவும் சுமந்திரன் புதிய காலத்துக்கான குஞ்சுப் பறவையாகவும் உள்ளார். ஆயினும் இதுதான் அவருக்கு உள்ளூரில் எதிர்ப்பையும் வெளியே கவர்ச்சியையும் கொடுக்கிறது.

தமிழ்த்தேசிய அரசியற் பரப்பிலுள்ள பலரும் அறிந்தோ அறியாமலோ கடந்த காலத்தில் உறைந்தவர்களாகவே (Nostalgist) உள்ளனர். அவர்களுக்கு அதொரு சுவையான இன்பம். அதொரு பொற்காலம். தங்க நினைவு. அவர்களுடைய அரசியலும் தான் அப்படியிருக்கும். ஆனால் சொந்த வாழ்க்கையோ சமகாலத்தோடு Apple Mobile phoneனோடு மிகத் தீவிரமாகப் பிணைந்திருக்கும். இந்த முரணைப் பற்றி அவர்கள் மனந் திறந்து ஒரு நிமிடம் யோசித்தால் போதும், நல் மாற்றங்கள் நிகழும்.

மிகச் சிலரே இதைக் கடந்தவர்கள். புதிய சகாப்தம் (Moving into a new era) ஒன்றுக்குச் செல்ல வேண்டுமானால், இறந்த காலத்திலிருந்து மீண்டெழ (Resurgence from dead-end politics) வேண்டும். அரசியல் அர்த்தத்தில் சொல்வதானால், கடந்த காலப் படிப்பினைகளிலிருந்து பெற்றுக் கொண்ட அறிவைக் கொண்டு நிகழ் காலத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். அதிலிருந்து எதிர்காலத்தை மேம்படுத்த முடியும். அதற்கு இந்தத் தருணத்தை இந்தச் சந்தர்ப்பத்தை இந்தக் காலத்தைச் சரியாக, உரிய முறையில் விளங்கிச் செயற்பட வேண்டும்.

அதாவது தன்னுடைய காலமாக உணர்தல் – Perception in his own time. அப்படிச் சிந்தித்தால்தான் கிடைத்த வாய்ப்பைத் தன்னுடையதாக (Taking his chance) மாற்றிக் கொள்ள முடியும். ஏறக்குறைய சுமந்திரன் அப்படிச் சிந்திக்கிறார் என்றே தெரிகிறது. என்பதால் தான் தன்னால் இந்தக் காலத்தை மாற்ற முடியும் என அவரால் நம்ப முடிகிறது. ஆனால், அதற்கு நிறைய வேலை செய்ய வேண்டும். அதைத் தனியே செய்ய முடியாது. அதற்கான ஆளணி, கட்டமைப்புகள், செயற்றிட்டங்கள், மக்கள் இணைப்புகள், அர்ப்பணிப்பான உழைப்பு எனப் பலவும் தேவை. அதற்கான பயிற்சியை முயற்சியை அவர் எடுக்க வேண்டும். முக்கியமாக மக்களுடனான உறவையும் அரசியற் பரப்பில் யதார்த்தமாகச் சிந்திக்கக் கூடிய தரப்புகளின் இணைவையும் சாத்தியப்படுத்த வேண்டும்.

இதுவரையில் சுமந்திரன் போட்டதெல்லாம் சிறு புள்ளியே. இனி அதை வளர்த்து ஒரு வடிவமாக்க வேண்டுமானால் அதற்கான வேலைகள் அவசியமாகும். எந்தச் சிறு வாய்ப்பையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் ஆற்றல் அவரிடம் உண்டு என்பதால், வாய்ப்புகளை உருவாக்கும் ஆற்றலையும் அவரால் வளர்த்துக் கொள்ள முடியும் என நம்புகிறேன். இதற்கு அவர் மக்களிடம் பல படிகள் இறங்கி வர வேண்டும். இல்லையென்றால் வரலாற்றின் தெரிவு இன்னொன்றாகி விடும்.

# தமிழ்மக்கள் பொதுச்சபை

(15ம் பக்கத் தொடர்ச்சி) நாலாம் கட்ட ஈழப் போரில், சில கிறிஸ்தவ மனிதநேய அமைப்புகளைத் தவிர குறிப்பிட்டுச் செல்லக் கூடிய மக்கள் இயக்கங்கள் எவையும் இயங்க முடியாத அளவுக்கு சிவில் வெளி ஒடுக்கப்பட்டி ருந்தது.

ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்தபின் தமிழ்மக்கள் பேரவை, தமிழ் மரபுரிமைப் பேரவை, பி2 பி மக்கள் இயக்கம் போன்ற அமைப்புகள் தோன்றின.அதாவது கடந்த ஒரு நூற்றாண்டுக்கு மேலாக தமிழ் மக்கள் மத்தியில் தொடர்ச்சியாக மக்கள் அமைப்புகள் தோன்றியிருக்கின்றன.

அரசியல் இயக்கங்கள் இளையோர் இயக்கங்கள் மத மறுமலர்ச்சி இயக்கங்கள் பிரஜைகள் குழுக்கள் அன்னையர் முன்னணிகள்கலாசாரக் குழுக்கள்....என்று தமிழ்மக்கள் ஏதோ ஒரு மக்கள் இயக்கத்தை ஒவ்வொரு காலகட்டத்திலும் உருவாக்கி வந்திருக்கிறார்கள்.

கடந்த ஒரு நூற்றாண்டுக்கு மேலாக தமிழ்மக்கள் மத்தியில் மகத்தான மக்கள் அமைப்பு உருவாக்கிகளும் நிறுவன உருவாக்கிகளும் தோன்றியிருக்கிறார்கள். இந்த விடயத்தில் தமிழ் மக்களிடம் மிகச் செழிப்பான ஒரு பாரம்பரியம் உண்டு. அந்த செழிப்பான பாரம்பரிய அடித்தளத்தில் இருந்து இப்பொழுது ஒரு புதிய மக்கள் இயக்கம் தோன்றியிருக்கிறது.

# திரும்பிப் பார்ப்பாரா மோடி?

(16ம் பககத் தொடர்ச்சி) ஆட்சிக்கும் தொடர்பு ல்லை என்று கூறமுடியாது. இந்திய பாராளுமன்றத் தேர்தல் இறுதிக் கட்டத்தை எட்டிய போது மூன்று நாட்கள் கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்தர் பாறையில் தியானத்தில் அமர்ந்திருந்த பிரதமர் மோடிக்கு பல சிந்தனைகள் உதித்திருக்கிறது. அதனை அவரே வெளிப்படுத்தியிருந்தார்.

தியானம் என்பது மெய்மறந்த நிலையில் இருப்பது. மோடி அவ்வாறு இருந்திருந்தால் இவ்வாறான சிந்தனைகள் தோன்றியிருக்காது. அந்தக் கட்டத்தில், கடந்த காலத்தை அவர் திரும்பிப் பார்ப்பதற்குப் பயன்படுத்திக் கொண்டிருந்தால், அடுத்த ஆட்சிக்காலம் அவருக்கு சிரமமானதாக இருக்காது. தனது ஆட்சிக்காலத்தில் நிகழ்ந்த தவறு களை மறுமதிப்பீடு செய்யத் தவறினால், பிராந்தியத்தில் இந்தியாவை தனிமைப் படுத்தி விட்டே அவர் அரசியலில் இருந்து விடைபெறும் நிலை ஏற்படலாம்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation

10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com













# 13ம் திருத்தத்தை எப்படி சஜித் நடைமுறைப்படுத்துவார்? கிளிநொச்சியில் சொன்னதை தென்னிலங்கையில் சொல்லட்டும்

## ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இனவெறிக் கூச்சலைத் தொடங்கியது



தான் ஆட்சிக்கு வந்தால் 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நடைமுறைப்படுத்துவேன் என்று கூறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அந்த திருத்தத்தில் உள்ள பொலிஸ் காணி உள்ளிட்ட அதிகாரங்களை எவ்வாறு வழங்கப் போகின்றார் என்பதனையும் நாட்டுக்கு கூற வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமை அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அந்தக் கட்சியின் தேசிய ஏற்பட்டாளரான பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தனவே இவ்வாறு கூறியுள்ளார்.

அதன்போது ரோஹித அபேகுணவர்தன மேலும் தெரிவிக்கையில் கிளிநொச்சியில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தமது ஆட்சிக் காலத்தில் 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை அமுல்படுத்துவோம் என்று கூறியுள்ளார். அவருக்கு 13ஆவது திருத்தத்தை கொண்டு வர வேண்டியதில்லை. அவரின் தந்தை பிரதமராக இருந்த போதே அந்த திருத்தம் கொண்டு வரப்பட்டது. இப்போது தனது தந்தை கொண்டு வந்ததை நிறைவேற்றுவேன் என்று மகன் கூறுகின்றார்.

13ஆவது திருத்தத்தில் நல்ல விடயங்களும் உள்ளன. பிரச்சினைக்குரிய விடயங்களும் உள்ளன. அதிகார பகிர்வு அதில் உள்ளது. அந்த அதிகாரத்தை ஏதாவது வகையில் ஏதேனும் பிரிவினர் முறையற்ற வகையில் பயன்படுத் இடமுள்ளது. அந்த அரசியலமைப்பு திருத்தத்தின் பின்னர் ஜனாதிபதிகள் பலர் இருந்துள்ளனர்.

இந்நிலையில் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் அதிலுள்ளன. அவற்றை எப்படி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வழங்கப் போகின்றார். இங்கே ஸ்ரீலங்கா பொலிஸார் இருக்கின்றனர். எதிர்க்கட்சித் தலைவர் ஆட்சிக்கு வந்தால் அந்த அதிகாரத்தை எப்படி வழங்குவார்.

வடக்கிற்கு தனியான பொலிஸார், கிழக்கிற்கு தனியான பொலிஸார் என்றா வழங்கப் போகின்றார். எமது நாடு 30 வருட யுத்தம் நடந்த நாடாகும். இப்போது நாட்டில் யுத்தம் இல்லை. அவ்வாறான நிலைமையில் இருந்து மீட்ட நாட்டை மீண்டும் பிளவுப்படுத்தவா? போகின்றார்.

ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் இந்த நிலைமைக்கு சென்றுள்ளார். இது ஆரோக்கியமானது அல்ல.

இதனால் 13ஆவது திருத்தத்தில் உள்ள அதிகாரங்களை எவ்வாறு வழங்கப் போகின்றீர்கள் சஜித் பிரேமதாச கூற வேண்டும். நீங்கள் கிளிநொச்சியில் சொல்வ தையே தெற்கிலும் கூறுங்கள். அப்போதே மக்கள் புரிந்து கொள்வர் என்றார்.

